# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60 தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2008 | ஸபர் 9 | தை 17 (30-1-77) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 81


## கல்குடாவில் அமிர்தலிங்கம் பேச்சு!

பாண பஸ் செங்கலடி வரு முன்பே கூட்டணித் தொண்டர்களும் இளைஞர்களும் "அமிர் வாழ்க, தனிநாடு அமைப்போம்" என்ற கோஷங்களை முழங்கினார்கள். அமிர்தலிங்கம் தம்பதிகளுக்குதிரு. சம்பந்தமூர்த்தி



## ஐ.தே.கட்சிக்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது!

அமரர் மாணிக்கவாசகரின் முதலாவது சிரார்த்த தின வைபவங்களில் கலந்து கொள்வதற்கு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் அவர்களுக்கும் அவரது துணைவியாரும் தமிழ் மகளிர் பேரவை செயலாளருமாகிய திருமதி அமிர்தலிங்கத்துக்கும் செங்கலடி சந்தியில் வெள்ளிக்கிழமை (21-1-77) இரவு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. யாழ்ப் தம்பதிகள் மலர்மாலைசூட்டி வரவேற்றார்கள். வெடிகள் கொழுத்தி கோஷங்கள் முழங்க, ஊர்வலமாக அம

—8-ம் பக்கம் பார்க்க

# கவிஞர் காசி ஆனந்தனின் சகோதரர்களுட்பட

# 12 தமிழ் இளைஞர்கள் விடுதலை!

## ஒன்றரை ஆண்டுகளுக்குப்பின்னர் சிறைக்கதவம் திறந்தது!

நீதி விசாரணையின்றி வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் 12பேர் கடந்த 26-1-77 புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். இந்தப் பன்னிரண்டுபேரும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வெலிக்கடைச் சிறைக்குள் பூட்டிவைக்கப் பட்டிருந்தார்கள். திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர், மட்டக்களப்பைச்சேர்ந்த எழுவர், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த நால்வர்—ஆக12பேர்இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப் பட்டவர்களுக்குள் கவிஞர் காசிஆனந்தனின் இரு சகோதரர்களும் அடங்குவர். விடுதலை செய்யப்படாமல் இன்னும் 17 தமிழ் இளைஞர்கள் சிறைக்குள் இருக்கின்றனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த சிவஜெயம், சுதர்சன், அல்போன்சோ மேரி, சிவராசா, செயராசா (சேயன்) வசந்தகுமார், ரஞ்சன் ஆகியோரும் திருக் கோணமலையைச் சேர்த்த சே.சிறீஸ்கந்தராசாவும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திரகுமார், குவேந்திரராசா, இரத்தினபாலா (ரமணி) யோகச்சந்திரன் (குட்டிமணி) ஆகியோருமே26-1-77ல்விடுதலைசெய்யப்பட்ட 12 இளைஞர்களுமாவர்.

26-1-77ல் விடுதலையான இளைஞர்கள் ஒவ்வொருநால்வரும் கைதுசெய்யப்பட்ட திகதிகள் வருமாறு:-

| | |
|---|---|
| சுதர்சன் — | 17-7-75 |
| சிவஜெயம் — | 31-7-75 |
| சந்திரகுமார் — | 28-7-75 |
| ரஞ்சன் — | ஆகஸ்ட்75 |
| குவேந்திரராஜா — | 2-8-75 |
| இரத்தினபாலா — | 31-8-75 |
| யோகசந்திரன்— | ஆகஸ்ட்75 |
| சிவராசா — | 18-9-75 |
| செயராசா(சேயன்)- | 19-9-75 |
| வசந்தகுமார் — | 15-9-75 |
| அல்போன்சோ மேரி — | செப்டம்பர் 75 |
| சிறீஸ்கந்த ராசா— | 5-11-75 |


விடுதலைசெய்யப்பட்ட இளைஞர்கள் 27-1-77ல் தத்தம் ஊர்களுக்குத் திரும்பினர். அங்கு கூட்டணி இளைஞர்களும், தமிழ் இளைஞர் பேரவையினரும், கூட்டணிப் பா. உ.க்களும் சிறையிலிருந்து வெளிவந்த இளைஞர்களுக்கு குதூகல வரவேற்பளித்தனர்.

கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனுதிராசா, வண்ணை ஆனந்தன், சத்தியசீலன், திசை வீரசிங்கம் ஆகியோருட்பட இன்னும் 17 தமிழ் இளைஞர்கள் வெலிக்கடை வெஞ்சிறைக்கோட்டத்திலுள்ளனர்.

தமிழ் இளைஞர்பேரவை இடைக்கால அமைப்பாளரும் தமது அண்ணனுமாகிய திரு. ஆ. ரகுபதி பாலசிறீதரனின் திருமணத்தில் கலந்துகொள்ளக்கூட வாய்ப்பின்றி இளைஞர் பூபதிபால வடிவேற்கரன் சிறையிலேயே இருக்கிறார். இவரது சகோதரியின் திருமணமும் இவர் சிறைக்குள் இருக்கும் போதே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. திரு. ரகுபதி பாலசிறீதரனின் திருமணம் 31-1-77ல் உடுவிலில் நடைபெறுகிறது.

## புத்தளத்தில் நினைவுக்கூட்டம்

சென்ற ஆண்டு பெப்ரவரி 2ம் திகதி புத்தளம் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிரிழந்த இஸ்லாமிய சகோதரர்களுக்கு அஞ்சலிதெரிவித்து, நினைவுக்கூட்டம் ஒன்றை புத்தளம் தமிழ்பேசும் இளைஞர் மன்றம் 2-2-77ல் புத்தளத்தில் நடத்துகிறது. இக்கூட்டத்திற்கு டாக்டர் இலியாஸ் தலைமை தாங்குவார். கூட்டத்தில் வி. என். நவரத்தினம் பா. உ. வி. தர்மலிங்கம் பா. உ, மு. சிவசிதம்பரம், டாக்டர் உதுமாலெவ்வை, திருமதி உதுமாலெவ்வை, எருக்கலம்பிட்டி கபூர், ஈழவேந்தன், கோவை மகேசன் ஆகியோருட்பட பலர் உரையாற்றுவர்.




## 1400 சதுரமைல் தமிழ் மண் ஆக்கிரமிப்பு!

அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரம் ஒன்றின்படி அம்பாறை மாவட்டத்தில் 800 சதுர மைல் பிரதேசமும் திருகோணமலை மாவட்டத்தில் 600 சதுர மைல் பிரதேசமும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

## அரசிலிருந்து கம்யூனிஸ்டுகள் வெளியேறுவார்களா?

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அரசாங்கத்திலிருந்து வெளியேறுமா? அல்லது தொடர்ந்துசேலைத்தலைப்பில் தொங்கிக் கொண்டிருக்குமா என்ற கேள்விக்கு 29-1-77 சனிக்கிழமை நடைபெறும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் விடைகாணப்படும் என்று தெரியவருகிறது. அரசிலிருந்து கம்யூனிஸ்ட்கட்சி வெளியேற வேண்டுமென்று கட்சியிலுள்ள பெரும்பாலான தீவிரவாதிகள் கருதுகிறார்களாம். எனினும் அரசுடன் ஒட்டியிருந்து பதவி அதிகார சுகம் அனுபவித்தவர்கள் தொடர்ந்தும் சேலைத்தலைப்பில் தொங்குவதையே விரும்புகிறார்களாம். இருவித கருத்துக்கள் இருந்த போதிலும், மாஸ்கோவிலிருந்து வரும் கட்டளையை அனுசரித்தே கம்யூனிஸ்ட் கட்சி இது சம்பந்தமான இறுதி முடிவையெடுக்கும் என்று தெரியவருகிறது!


தமிழ் வாழ்க! தமிழ்ஈழம் மலர்க!!

## திருமண அழைப்பு

நிகழும் நள ஆண்டு தைத்திங்கள் 18ம் நாள் (31-1-77) திங்கட்கிழமை மாலை 6 மணிக்கும் இரவு 7.30 மணிக்குமிடையே வரும் சுபவேளையில்—

எமது மகன்
செல்வன்
ஆ. இரகுபதிபாலசிறீதரன்
(இலங்கை வங்கி, புதுக்கடைக்கிளை)
(தமிழ் இளைஞர் பேரவை இடைக்கால அமைப்பாளர்)
அவர்களுக்கும்

உடுவில் திரு. ச. சண்முகநாதன் (சானு) தம்பதிகளின் புதல்வி
செல்வி. சுமதி
(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு)
அவர்களுக்கும்

உடுவில் கிழக்கு அம்பலவாணர் வீதியிலுள்ள "துவாரகை" இல்லத்தில் திருமணம் நடைபெறவிருப்பதால், இவ்வைபவத்தில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

* தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

இங்ஙனம்,

ச. சண்முகநாதனும் (சானு) பாரியாரும்
(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்)
5 கிருலப்பனை, ஸ்ரேசன் வீதி
நாவல, நுகேகொட.
(மணமகளின் பெற்றோர்)

க. சபா ஆனந்தரும் பாரியாரும்
(இளைப்பாறிய அதிபர்)
'ஸ்ரீசாலினி'
காங்கேசன்துறை வீதி, இணுவில்.
(மணமகனின் பெற்றோர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மு. ஜெயக்குமார்,
புதுக்குடியிருப்பு,
தம்பலகாமம்.

கே: எட்டப்பர்களாக வாழும் தமிழர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவர்கள் நமது அன்ருட வாழ்விலிருந்து எட்ட வைக்கப்படவேண்டியவர்கள்!

ஃ

எம்.எம். இஸ்மாயில்,
புத்தளம்.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணியென்று பெயர் வைத்திருக்கிறீர்களே, அதில் முஸ்லிம்களுக்கு இடமில்லையா?

ப; தமிழைத் தாய்மொழியாக ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் அனைவரும் தமிழர்களே. முஸ்லிம்களும் தமிழையே தாய்மொழியாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எனவே 'தமிழர்' என்ற பதத்துக்குள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களும் அடங்குகிருர்கள்.

ஃ

ம. யோசெப்-ஜீவரத்தினம்,
கரவெட்டி மேற்கு;

கே: தனிநாடு கிடைத்த பின்னர் செல்லையா குமாரசூரியர், தியாகராசா, அருளம்பளம் போன்ருேர் என்ன செய்வார்கள்?

ப: தமிழ் ஈழத்தை எந்தக் கட்சி ஆளுகிறதோ அந்தக் கட்சிக்கு அப்போது பந்தப் பிடிப்பார்கள்!

ஃ

சி. ஞானகுமார்,
அரசடி வீதி,
நல்லூர்

கே: அறிஞர் அண்ணு இன்று இருந்தால்...?

ப: அவர் மீது இலஞ்ச ஊழல் வழக்குகள் போட எவரும் துணிந்திருக்கமாட்டார்கள்; தி. மு. கழகம் பிளவுபடாது, உறுதியான கட்சியாக இருந்திருக்கும்; தமிழ் நாட்டில் தி. மு. கவை வீழ்த்த எந்தக்கொம்பனுலும் முடியாமலிருக்கும்; வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தெம்புடன் இருப்பார்கள்!

ஃ

கே. இராசையா,
கொழும்பு-6

கே: அஹிம்சைக்கும். ஆயுதப்போருக்கும் வித்தியாசமென்ன?

ப: ஆயுதப்போரில்வெற்றி அல்லது தோல்வி இரண்டில் ஒன்றே ஏற்படும். ஆயுதப் போரில் ஒருமுறை நசுக்கப்பட்டால், தோல்வியுற்ருல் அதிலிருந்து மீண்டும் எழுவது கடினம். அஹிம்சைப் போரில் தோல்வியென்பதற்கு ஒருபோதுமே இடமில்லை!

ஃ

க. மதனதேவா,
206. பிரதான வீதி,
திருக்கோணமலை.

கே: கலைஞர் கருணுநிதி மீது குற்றஞ்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கு எந்த நிலையிலிருக்கிறது!

ப: அவர் மீது வேண்டுமென்றே ஒன்றுக்குமேல் ஒன்ருக பல வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. நீங்கள் எந்த வழக்கைப் பற்றிக் கேட்கிறீர்களா? நீதிமன்றத்திலுள்ள வழக்குகளைப் பற்றிக் கவலைப்படாமல், கலைஞர் தமிழக பொதுமக்களாகிய நீதிபதிகளின் முன்னிலையில் தமதுவழக்கை அன்ருடம் எடுத்துரைத்து வருகிருர்!

கே: திருகோணமலைத் தொகுதியில் கூட்டணி சார்பில் அடுத்த பொதுத்தேர்தலில் யார் போட்டியிடுவார்?

ப: அது, திருகோணமலையிலுள்ள கூட்டணி ஆதரவாளர்களும். கூட்டணியின் நடவடிக்கைக்குழுவும் சேர்ந்து தீர்மானிக்கவேண்டிய விஷயம். அது பற்றி அபிப்பிராயம் கூறுவது என் வேலையல்ல.

ஃ

அ. சிவசுப்பிரமணியம்
பிபிலைத்தோட்டம்,

கே: அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம்கொண்டு வருவது பற்றி 'ஒப்சேவர்' பத்திரிகையில் நீதியமைச்சின் காரியதரிசி திரு. நிஹால் ஜெயவிக்கிரமா நீண்ட கட்டுரையொன்றை எழுதியிருப்பதன் நோக்கம் என்ன?

ப: திரு. நிஹால் ஜெயவிக்கிரமா மிகவிரைவில் ஐ. நா. சபைக்கு இலங்கையின் பிரதிநிதியாக அனுப்பப்பட விருப்பதாகக்கேள்வி. ஐ.நா சபைக்கு போவதற்கு முன்னர், தமக்கு "பரந்து விரிந்த" மனப்பான்மை இருப்பதுபோல அவர் காட்டிக்கொண்டுவருகிருர். அவரிடம் ஒரு கேள்வி கேட்கலாமா? இப்போதைய அரசியல் சட்டத்தை எழுதிய குழுவில் திரு. நிஹால் ஜெயவிக்கிரமாவும் ஒருவராக இருந்திருக்கிருர். எனவே அரசியலமைப்பு எழுதப்பட்டபோதே தமிழ்மொழி உரிமை பற்றியவிதியை அதில் சேர்த்திருக்கலாமே? ஐந்து ஆண்டுகள் கழித்துத்தானு தமிழர் பிரச்சினை பற்றி அவருக்கு ஞானுேதயம் பிறந்திருக்கிறது?

கே: பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக திரு. காசி ஆனந்தனை தடுப்புக் காவலிலிருந்து அரசு விடுதலைசெய்யுமா?

ப: விடுதலைசெய்யாவிட்டால் தடுப்புக்காவலிருந்தபடியே அவர்போட்டியிட்டு வெற்றியீட்டக்கூடும்!

ஃ

ஞா. பழனித்தம்பி
(திராவிடத்தம்பி)
களுதாவளை
மட்டக்களப்பு

கே: கலைஞர் கருணுநிதி தமிழுக்கு செய்த சேவையைப்பற்றி சிலவற்றைக் கூறுவீர்களா?

ப: ஒருகொத்தைத் தந்து கடலை அளக்கச் சொல்கிறீர்களே முடிகிற காரியமா அது? கருணுநிதி—தமிழுக்கு ஒரு நிதி. அதைவிட வேறு என்ன கூறமுடியும்?

ஃ

க. தம்பி
கொழும்பு 6.

கே: கடந்த ஆண்டு (1976) பொங்கற் திருநாளை கரிநாளாக சிங்களஆட்சி பிரகடனப்படுத்த முடிந்தது தமிழருக்கு என்று ஒரு தனி ஆட்சி இல்லாமையினுற் தானே! இதைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் உணர்வார்களானுல், தமிழ்ஈழம் வெகு தூரத்தில் இருக்க முடியாதல்லவா?

ஃ

ப: ஆம், ஆம், ஆம்!

எஸ். மகாலிங்கம்,
50/1, எல்லை வீதி,
மட்டுநகர்.

கே: தியாகி காசி ஆனந்தன் அவர்கள் மட்டுநகரில் வேட்பாளராக நிற்க விரும்பினுல் அவருக்காக எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராசதுரை அவர்கள் விட்டுக்கொடுப்பாரா?

ப: திரு. இராசதுரை அவர்களுக்கு அனுப்பவேண்டிய கேள்வியை தவறிப்போய் எனக்கு அனுப்பிவிட்டீர் என்று நினைக்கிறேன்!

| |
|---|
| திருவாளர் குயுக்தியார் |
| 194 ஏ பண்டாரநாயக்க வீதி, கொழும்பு—12. |

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

---




நூல்:- "வல்லவரும் நல்லவரும்" ஆசிரியர்: எஸ். பி. கிருஷ்ணன்.

தென் மட்டுவில் எஸ். பி. கிருஷ்ணனின் "வல்லவரும் நல்லவரும்" மானிட வர்க்கத்தின் மேம்பாட்டுக்காக பல்வேறு துறைகளில் உழைத்த வல்லாரையும் நல்லாரையும் பற்றிய கட்டுரைகளைக்கொண்ட ஒரு தொகுப்பு நூல். இக் கட்டுரைகள் ஏற்கனவே சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்தவை.

அறிஞர் அண்ணு, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி., புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், கோப்பாய்க் கோமான் வன்னியர், வங்கம், தந்த சிங்கம் சுபாஸ் போஸ் கலாயோகி ஆனந்த குமாரசாமி, அறப்போர்த் தலைவன் மாட்டின் லூதர் கிங் ஆகியோரைப் பற்றி நூலாசிரியர் கிருஷ்ணன் தமக்கேயுரித்தான சரளமான நடையில் கட்டுரைகளைத் தீட்டியுள்ளார். தேசிய, சர்வதேசிய பரிமாணங்களைக்கொண்ட இத் தலைவர்களைப்பற்றிய கட்டுரைத் தொகுதியில் ஆசிரியர் தமக்கு எழுத்தறிவித்த ஆசிரியர் திரு. ந. அருணுசலம் அவர்களைப் பற்றிய கட்டுரையையும் சேர்த்திருப்பது மிகவும் இங்கிதமானது. 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது முதுமொழி. நூலாசிரியர் கணிப்பில் அவரது நல்லாசிரியர் பெற்ற பரிமாணம் குறிப்பிடற்குரியது. அதைக் காட்டிலும் குருபக்தி நூலாசிரியரின் மனேவளத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது.

இனவெழுச்சியும் மொழியுணர்வும் ஊற்றெடுத்த காலகட்டத்தைத் தோற்றுவாயாகக் கொண்டு எழுத்துலகில் நுழைந்தவர் திரு. எஸ். பி. கிருஷ்ணன். இதுவரை பல சிறுகதைகளையும் கட்டுரைகளையும், எழுதிப் பண்பட்ட எழுத்தாளர். "ஒன்றே தெய்வம்" என்ற சிறுகதைத் தொகுதியையும் "பொழுதுபோக்கு", "பொற்கிழி" என்ற நூல்களையும் எழுதி வெளியிட்டவர். "வல்லவரும் நல்லவரும்" இந்தச் சரத்திலே தொடுத்த இன்னெரு மலராகும். மேலே குறித்த பெரியார்கள் பற்றிய நூலாசிரியரின் தரிசனம் தனித்துவமானது.

—நவம்

●

நூல்: கூலைத்தீவின் பேர்போன ஓவியர் (நாடகம்)

ஆசிரியர்: வண. எஸ். டெசி அ. ம. தி.

வெளியீடு: பஸ்தியான் அச்சகம், பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

புறமும் அகப்பாட்டும்
காப்பியனுல் பூதத்

இறவா இலக்கணத்தின்
ஏடும்—குறள்மொழியும்
ஆர்க்கும் சிலம்பின்
அழகு தமிழ்நடையும்
பார்க்காத கண் பாவக்கண்

என்று இன்தமிழ் இலக்கியங்களைப் படிக்க மறந்த நம் தமிழ் மக்களைச் சாடினுன் உணர்ச்சிக்கவிஞன் காசி ஆனந்தன். நம்மவர்தான் தமிழனை மறந்தாலும் அத்தமிழின் அழகினில் மயங்கிடும் பிறமொழி அன்பரும் அறிஞரும் தமிழ்ப்பெருமை கூறத்தவறுவதில்லை. பெரும்பாலும் தமிழ் கற்ற பிறமொழி அன்பர் தம் நினைவாக தமிழ்நூல்களை விட்டுச் செல்லத் தவறுவதில்லை. இவ்வகையில் இன்று பிறந்து இருப்பது 'கூலைத்தீவின் பேர்போன ஓவியர்' எனும் சிறு நாடகம்.

பன்னெடுங்காலம் யாழ்க்குடாநாட்டிலே வாழ்ந்து வரும் 'டெசி' எனும் அமலமரித்தியாதிகளின் குருவாகிய பிறமொழி அன்பர் எழுதிய எழுத்து. உற்ருர் பெற்ருரை பரமனுக்காய்த் துறந்து— மறந்து தம்பணி, பணிசெய்வதே எனும் பாங்குடன் எம் மக்களுடன் மக்களாய் இரண்டறக் கலந்துபிட்ட கிறிஸ்தவ துறவியின் இந்நாடகம் எம் மக்களின் சாதாரண வாழ்வினை மையமாகக்கொண்டு பின்னப்பட்டுள்ளது. குடியால் சீரழிந்த ஓவியன் ஒருவன் திருந்திய பின் தான்பட்ட கடனை அடைப்பதற்கு கையாளும் தந்திரமே நாடகத்தின் மையக்கருவாக உள்ளது அதேவேளை இச்சிறிய மையக்கருவை கொண்டே [illegible] தட்டாளர் [illegible]ழத்துப்போன் போன [illegible]ன்ற ஆய்வுசெய்துவிடும் ஆசிரியன் பாராட்டப்பட வேண்டியவன்.

ஆசிரியன் தமிழ் எழுத்து நடை இயல்பாக அமைந்து அந்நியர் படைப்பா இது எனக்கேட்கத் தோன்றுகிறது. மேலும் பழமொழிகள் அவர் எழுத்தில் பழகிவரும் பாணியை பார்க்கையில் ஆசிரியர் தமிழனுகவே மாறிவிட்டார் என்பதை தெட்டென விளக்குகிறது அத்துடன் எதுகைமோனை கலந்த நடைகள் கலந்து அவரின் தமிழ்ப் புலமையை புரியவைக்கிறது. ஆயினும் நாடகம் முழுவதும் பேச்சுத் தமிழில் அமைந்து மக்களின் பேச்சு ஒலியாக அமைகிறது.

மொத்தத்தில் நாடகம் சிறுவர்க்கும் —சிந்தனையாளர்க்கும் ஏற்ற நல்ல படைப்பு என்றே கூறல் வேண்டும். அத்துடன் மக்கள் சேவையில் ஈடுபாடு கொண்டு முதுமையுற்ற வண. டெய்சி சுவாமி அவர்களின் பார்வை மங்கிநோய்வாய் பட்டுள்ளார். தாயை—தந்தையை உற்ருரை உறவினரை உதறித்தள்ளி யாழ்குடாநாடு வாழ் மக்களே தன் சொத்தென வாழ்ந்த துறவிக்கு மக்கள் தம் நன்றிக்கடனுக — குறிப்பாக கிறிஸ்தவ மக்கள் சிறப்பான நன்றிக்கடனுக—அவர் எழுதிய ஆக்கத்தை ஆதரிக்க வேண்டும்.

—கரன்

●

புதிய உலகம் (தை- மாசி- 1977)

ஆசிரியர்:- கரவையூர்ச் செல்வம்.

வெளியீடு:-கிங்ஸ்லிசுவாம்பிள்ளை. த. பெ. எண் 2, யாழ்ப்பாணம்.

விலை:- ரூபா ஒன்று.

'புதியதோர் உலகம் செய்வோம்— கெட்டபோரிடும் உலகினை வேரோடு சாய்ப்போம்' என்று மார்தட்டினுன் புரட்சிக்கவிஞன் பாரதிதாசன். அந்தக் கவிஞன் வழியில் நின்று, தமிழ் மக்களிடையே உள்ள மூடத்தனங்களை போக்கிடவும் பிற்போக்கு எண்ணங்களை வேரோடு சாய்த்திடவும்,, தமிழ் மக்களிடையேயுள்ள பிரிவினைகளையும் பேதங்களையும் ஒழித்துக்கட்டி, புதியஉலகம் படைக்கவும், தமிழர் திருநாளாம் பொங்கல் புதுநாளன்று மலர்ந்துள்ளது 'புதிய உலகம்' எனும் புத்தம் புது ஏடு" ஆன்ற தமிழ்ப்புலமையும் தமிழினப்பற்றும், நிறைந்த கரவையூர்ச் செல்வம் அவர்களின் கைவண்ணத்தில் இந்த நூல்உருவாகியுள்ளதால் அதன் தரத்துக்கு வேறு சான்றுகள் வேண்டியதில்லை. 'நான் ஏன் பிறந்தேன்' என்ற ஆசிரியர் தலையங்கம், "புதிய உலகத்தின்" கொள்கைகளையும் கோட்பாடுகளையும் எடுத்து விளக்குகிறது. ஈழவேந்தன், வண. தேவநேசன், பேராசிரியர் க. ப. அறவாணன், திரவியம், ஆகியோரின் கட்டுரைகளும், நாக பத்மநாதனின் உருவகமும் ஏட்டுக்கு சுவையூட்டுகின்றன. எண்ணியதை எண்ணியபடி எழுதியிருக்கிருர் ஆசிரியர் கரவையூர் செல்வம், ஆர்ட் காகிதத்தில் அழகான மூவர்ண அட்டை சிந்தனையைக் கிளறவைக்கிறது. பாராட்டப்பட வேண்டிய பணி. தமிழ் இலக்கியத் தோட்டத்தில் இதுபோல் ஆயிரம் மலர்கள் மலர வேண்டும்.

—கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

# வடம் பிடிக்க வாங்க!

**அன்பு நண்பா,**

நீண்டகாலத்திற்கு முன்னர் நின்றுபோன ஏடொன்று மீண்டும் வெளிவந்திருக்கிறது; படித்துப்பாருங்கள் என்று என் நண்பர் ஒருவர் ஏடொன்றை என்னிடம் தந்துவிட்டுப் போனுர் சில நாட்களுக்கு முன்னர். வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சியேற்படுத்திடவும் விசையொடிந்ததேகத்தில் புதிய முறுக்கேற்றிடவும், நாட்டினிலே நல்ல பல ஏடுகள் வெளிவந்திடவேண்டும்; ஆட்சிபீடத்தார் தமிழ் சமுதாயத்துக்கு செய்திடும் அநியாயங்களை எடுத்துச்சொல்லி அதை வன்மையாக எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பிடவும், தமிழினத்தின் ஒற்றுமையையும் உறவையும் கட்டியெழுப்பிடவும், தமிழ்தேசிய ஒருமைப்பாட்டினை வளர்த்திடவும் கூடிய நல்ல பல ஏடுகள் தமிழ் ஈழ நாட்டுக்கு மெத்தவும் தேவையென்று எப்பொழுதுமே கருதுபவன் நான். இந்த நிலையில் நின்றுபோன ஏடொன்று மீண்டும் உயிர்பெற்று வந்திருப்பதையறிந்து, மகிழ்ச்சிபொங்கிட, அந்த ஏட்டினிலே இன்றைய ஈழத் தமிழினத்தின் ஒற்றுமைக்கு மேலும் வலிவும் பொலிவும் சேர்த்திடும் கருத்துக்கள் இருந்திடலாம்; சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இழைத்துவரும் கொடுமைகள் பற்றி கடினவார்த்தைகளால் சாடப்பட்டிருக்கலாம்; என்றெல்லாம் எண்ணத்தில் ஆர்வம்பொங்கிட அந்த ஏட்டினைப் புரட்டியபோது நான் அடைந்திட்ட ஏமாற்றம்... அப்பப்பா அளவிடற்கரியது!

மீண்டும் அதே பழைய பல்லவி...! தமிழர் விடுதலைக் கூட்டணி மீது குற்றம் குறைகளை மட்டுமே கரித்துக் கொட்டிக்கொண்டிருக்கும் அதே விரக்தி மனப்பான்மை...! நான்தான் பெரிது...என்னைவிட்டால் வேறு யார்...என்ற அதே ஆணவம், அகம்பாவம்! ஈழத்தமிழின வரலாற்றில் முப்பதாண்டுகளுக்குப்பின் ஏற்பட்டிருக்கும் இன ஒற்றுமையை கேலி செய்திடும் போக்கு...இவற்றையே நான் அதிலே கண்டேன்!

தமிழினத்திலேயுள்ள ஒரு பிரிவினர்—அது எவ்வளவுதான் சிறியதாக இருந்தாலும்கூட—ஒன்றுபட்ட தமிழின அணியிற்சேர்ந்து தமிழினத்தின் எதிரிகளுடன், தமிழினத்தின் துரோகிகளுடன் மோதுவதற்குப் பதிலாக—தமிழரும் தமிழருமே மோதுகின்ற தன்மையிலேயே இன்னும் தமது சிந்தனையை செலுத்திவருவது உண்மையிலே வருத்தத்துக்குரிய ஒரு நிலைதான்!

சேர்ந்து செயல்படுவதற்குப்பதிலாக—தனியே பிரிந்து நின்று குற்றம்பிடித்து, குறை சொல்லி, கோள்மூட்டி ஏற்பட்டிருக்கின்ற தமிழ் இன ஒற்றுமைக்கு வேட்டுவைக்கின்ற தகாத முறையிலே ஏன்தான் அவர்களது சிந்தனை இன்னும் சென்றுகொண்டிருக்கிறதென்று எனக்கு விளங்கவில்லை!

சேர்ந்து செயற்படும்போது நிச்சயம் சிலசில சிக்கல்கள் தோன்றத்தான் செய்யும்; அந்தச் சிக்கல்களை அவிழ்க்கக்கூடிய நிதானமும், பொறுமையும், பொறுப்புணர்ச்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு உண்டு. ஆனல், ஏற்படக்கூடிய சிக்கல்களையே பெரிதுபடுத்திக்காட்டி, தமிழினத்தின் ஒற்றுமையை சிதைக்கின்ற எந்த முயற்சியையும் தமிழன் எவனும் மன்னிக்கப் போவதில்லை; அதற்கு இடமளிக்கவும் போவதில்லை!

கடந்த முப்பதாண்டுகளாக பிரிந்து பிளவுபட்டு—தமக்குள்ளே முட்டி மோதிக்கொண்டு நின்ற ஈழத்தமிழர்கள்—ஒன்று பட்டாலே உண்டுவாழ்வு என்பதை உணர்ந்து ஒரேயணியாக-தமிழர் விடுதலைக் கூட்டணியாக—இன்று திரண்டெழுந்து நிற்கிறார்கள். தமிழ் தேசிய இனம் என்ற அடிப்படையில் ஏற்பட்டுள்ள இந்த இன ஒற்றுமையை மீண்டும் ஒருமுறை பலிகொடுத்திட ஈழத்தமிழர்கள் தயாராக இல்லை!

**இந்த ஒற்றுமையின் அடித்தளம்—ஆணிவேர்—தனிப்பட்ட செல்வநாயகமோ, தனிப்பட்ட பொன்னம்பலமோ, தனிப்பட்ட தொண்டமானே அல்ல; இந்த ஒற்றுமையின் அடித்தளம் ஆணிவேர்—தமிழ் இன உணர்ச்சிதான்! ஈழத்தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழவேண்டும்; சுயமரியாதையுள்ளவர்களாக வாழவேண்டும்; தம்மைத்தாமே ஆளுவோராக மாறவேண்டும்; சுதந்திரமுள்ள மக்களாக வாழவேண்டும் என்கிற இந்த உணர்ச்சிகளே தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடித்தளமாக அமைந்துள்ளனவே தவிர—தனிப்பட்டவர்களுக்கு துதிபாடுவதற்காகவோ, 'மிண்டு' சாத்துவதற்காகவோ கூட்டணி உருவாகவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணியின் நாடி நரம்புகளாக இரத்த நாளங்களாக—இந்த நாட்டின் மான உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழனும் விளங்குகிருனே தவிர—தனிப்பட்ட மனிதர்களின் சக்தியால் கூட்டணி இயங்கவில்லை!**

தலைவர்கள் யாரும்வரலாம்; போகலாம்; ஆனல் தமிழர் விடுதலைக்கூட்டணி ஏற்படுத்தியிருக்கின்ற தமிழ் இனத்தேசிய ஒற்றுமை—தமிழின உணர்ச்சி—விடுதலை வேட்கை—என்றென்றைக்கும் நீடிக்கும்; நீடிக்கவும் வேண்டும்!

நண்பா, ஒரு தேர்த்திருவிழாவுக்குப் போகிறேம்; தேர் இருப்பிடத்தைவிட்டுப் புறப்படும்போது—தேருக்கு வடம்பிடிக்க பல நூற்றுக்கணக்கானேர் ஓடிவருகிறார்கள்; தேர் இருப்பிடத்தைவிட்டு அசைகிறது; வெய்யில் ஏறுகிறது; வடம்பிடித்தவர்களில் சிலர் வெய்யிற்சூட்டைத் தாங்கமுடியாது—வடக்கயிற்றை விட்டுவிட்டு, தேர் தெற்கு வீதியில் வரும்போதே மெதுவாக விலகிச்சென்று விடுகிறார்கள்; தேர் மேற்கு வீதியில் வரும்போது வேறு சிலர் நழுவி விடுகிறார்கள்; தேர் வடக்கு வீதியில் வரும்போது இன்னும் சிலர் "இயலாது நம்மால்" என்று கழன்றுவிடுகிறார்கள்; எஞ்சியுள்ள சிலரே இறுதிவரை நின்றுபிடித்து—வெய்யிற் சூட்டையும் தாங்கிக்கொண்டு களைப்பையும் பாராது—தேரை அது சென்றடைய வேண்டிய இடம் நோக்கி இழுத்துக் கொண்டுவந்து சேர்க்கிறார்கள்!

வேறுசிலர் தேர் இருப்பிடத்தைவிட்டு புறப்பட்டு தெற்குவீதியில் வரும்போது—வடத்தைப்பிடித்து இழுத்து மேற்குவீதி மட்டும் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு களைத்துப்போய் போய்விடுவார்கள்; இன்னும் சிலர் மேற்கு வீதியிலிருந்து வடக்குவீதி மட்டும் வடத்துக்கு கைகொடுப்பார்கள்; ஆனல் தேர் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு, நான்கு வீதிகளையும் சுற்றி, அது தனது இலட்சியமான இருப்பிடத்துக்கு வருமட்டும் ஒருசிலரே கடைசிமட்டும் நின்று வடம்பிடிப்பார்கள்!

ஆனல்—அதற்காக தேர் வடத்தை தொடுபவர்கள் எவராயிருந்தாலும், தேர் நிலைக்கு வருமட்டும் தொடர்ந்து இழுத்தேயாகவேண்டும்; அதற்கு முடியாதவர்கள் தேர்வடத்தில் தொடவேகூடாது என்று யாரும் நிபந்தனை போடுவதில்லை! வருபவர் வரட்டும்; இழுக்கிறவரை இழுக்கட்டும்; நாம் நின்று இறுதிவரை தேரை இழுத்துச் செல்வோம் என்றே உண்மையான 'பக்தர்கள்' கருதுவார்கள்!

அதுபோலத்தான் நண்பா, தமிழர் விடுதலைக்கூட்டணி எனும் தேரை, இன ஒற்றுமை எனும் வடம்பிடித்து கட்டுப்பாடு எனும் முட்டுக்கட்டைபோட்டு, 'சுதந்திரத் தமிழ் ஈழம்' எனும் இலட்சியம் நோக்கி இழுத்துச்செல்கிறேம்! இதிலே இடையிலே ஒரு சிலர் களைத்துப்போய் இதிலிருந்து ஒதுங்கினலும், இன ஒற்றுமையெனும் வடம் அப்படியேதான் இருக்கும் இடையிலே வடம்பிடிக்க எவரெவரோ இன்னும் வரலாம்; போகலாம்; ஆனல் தமிழ் மக்கள்—தமிழினத்திலேயுள்ள விடுதலை உணர்வுமிக்க இளைஞர்கள்—தமிழர் விடுதலைக்கூட்டணி எனும் தேரை சுதந்திரத் தமிழீழம் எனும் இ[illegible] இழுத்துச்செல்லத் தான் போகிருர்கள்!

வடம் பிடிக்க வராதவர்கள்—எட்ட நின்று ஏளனம் செய்தாலும் சரி—கேலி மொழிகளை சிந்திலும் சரி அதனுலெல்லாம்—தேர் ஓடாது நின்றுவிடாது!

ஒன்றுபட்ட தமிழினத்தின் சக்தியைப் புரிந்துகொண்டு விட்டதால்தான், இன்றைய ஆளும் சிங்களக்கட்சியும், அடுத்து ஆட்சிக்கு வரப்போவதாகக் கனவு காணும் சிங்கள ஐ. தே. கட்சியும், தமிழர் விடுதலைக்கூட்டணி பற்றி இன்று 'காதல்மொழி' பேசத்தொடங்கியிருக்கின்றனர்! பிரதமரின் மகன் அனுரா பண்டாரநாயகாவும், செல்லையா குமாரசூரியரும் இந்தக்கிழமை யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது, தமிழர் விடுதலைக்கூட்டணியை அரசுடன் பேசவரும்படி வருந்தியழைத்திருக்கின்றனர்!

தமிழின விடுதலை கோரிய தமிழ் இளைஞர்கள்—தமிழ்ஈழத்தின் தவக்கவிஞன் காசி ஆனந்தன்—மாவை சேனதிராசா, வண்ணை ஆனந்தன், சத்தியசீலன், திசைவீரசிங்கம், இன்னும் எத்தனையோ தமிழ் இளைஞர்கள்—நீதிவிசாரணைகூட இன்றி பல ஆண்டுக்கணக்காக வெலிக்கடைச் சிறையின் நீண்ட மதில் சுவர்களுககுப்பின்னுல் ஏங்கிக்கொண்டிருக்கும்போது—இவர்களைச் சிறைக்குள் பூட்டி வைத்துக்கொண்டிருப்பவர்கள்தாம், பேச்சுவார்த்தையென்றும், சமாதானமென்றும் யாழ்ப்பாணத்தில் நின்று ஜாலவித்தை காட்டியிருக்கிருர்கள்!

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஒருபோதுமே பேசமாட்டோம் என்று திமிர் பிடித்து அடித்துப் பேசியவர்கள்; தமிழர் விடுதலைக் கூட்டணியை நசுக்கியழித்துவிடுவோம் என்று மார்தட்டியவர்கள்; தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் மக்கள் மத்தியிலே ஆதரவில்லை—எமக்கே ஆதரவுண்டு என்று கூறி முழுப்பூசனிக்காயை இலைச்சோற்றுள் மறைக்க முயன்றவர்கள்; தமிழ் மக்களிடையேயுள்ள ஒருசில துரோகிகளைப் பிடித்து, அவர்களுக்கு எலும்புத்துண்டுகளை வீசி அவர்களுக்கு செயற்கைத் தலைவர்களாகத் தலைப்பாகைகட்டி உலகத்தை ஏமாற்ற முயன்றவர்கள்; தமிழ் மக்களுக்கு ஒருசில அற்ப சலுகைகளைக்காட்டி, ஒருசில உத்தியோகங்களைக்கொடுத்து, தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு எதிராக அவர்களை திருப்பிவிடலாம் என்று முனைந்து அதிலே மூக்குடைந்துபோனவர்கள்; இன்றைக்கு தமிழ் மக்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன்—தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேசத்தயார் என்று ஜாலவித்தைகாட்ட ஆரம்பித்திருக்கிருர்கள்!

**தமிழர் விடுதலைக் கூட்டணியை தன்பக்கம் இழுத்துக்கொள்ள ஆளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒருபுறம் துடிக்கிறது; மறுபக்கம் ஐக்கிய தேசியக்கட்சி துடிக்கிறது; இதற்கு அடிப்படைக்காரணம், தமிழ் மககள்மீது கொண்ட அன்பல்ல—பற்றல்ல—பாசமல்ல; முற்றுமுழுதாகச் சுயநலம்தான்!**

அடுத்தபொதுத்தேர்தல் ஒன்று இங்கு நடைபெறுமானுல்—எந்த சிங்களக் கட்சி ஆட்சிபீடமேறப்போவதென்பதை நிர்ணயிக்கின்ற துருப்புச் சீட்டு (Marginal votes) சிங்கள நாட்டிலே வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களின் கைகளிலே இருக்கின்ற காரணத்தினுல்தான்—தமிழர் விடுதலைக்கூட்டணி மீது 'திடீர்' காதல் பிறந்திருக்கிறது சிங்களக் கட்சிகளுக்கு! தமிழர் விடுதலைக்கூட்டணி எந்தப்பக்கம் தனது கண்ஜாடையை காட்டுகிறதோ, அந்தப் பக்கமே வாக்களிப்பார்கள்—அந்த அளவுக்கு தமிழ் மக்கள் ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட்டு கட்டுப்பாட்டுடன் இருந்துவருகின்றனர்—என்கிற பாரிய உண்மை சிங்களக் கட்சிகளுக்கு நன்கு தெரியும்! அதனுல்தான் கூட்டணிக்கு இன்று நேசக்கரம் நீட்டுவதுபோல பாசாங்குசெய்கிருர்கள்! 'வசியம்' போடலாம் என்று நினைக்கிருர்கள்!!

தமிழர் விடுதலைக்கூட்டணி, எந்தச் சிங்கள மாயையிலும் சிக்கப்போவதில்லை; அது தமிழினத்தின் பக்கமேயிருக்கும்; தமிழ் ஈழ விடுதலை இலட்சியத்திலேயே அது கண்ணும் கருத்துமாக இருக்கும்; தமிழர்களை ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டதென்பதை தமிழர் விடுதலைக்கூட்டணி சிங்களக்கட்சிகளுக்கு உறைப்பாக எடுத்துணர்த்தும் என்று எதிர்பார்ப்போம்!

**உன் அன்புத் தோழன்.**

மகிலை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## பொதுத்தேர்தலும் தமிழ் மககளும்!

இந்த ஆண்டு — பொதுத்தேர்தல் ஆண்டு. தேசிய அரசுப்பேரவை எந்தச் சமயத்திலும் கலேக்கப்படவும், பொதுத்தேர்தலுக்கான திகதி எந்த நேரமும் குறிக்கப் படவும் கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. இன்னும் இரண்டொரு மாதங்களில் பொதுத்தேர்தல் நடைபெறுவது தவிர்க்கமுடியாததாகி வருகிறது. ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் முன் செல்வதற்கு அரசியற் கட்சிகள் தங்களைத் தயார் படுத்திவருகின்றன. எம்மை ஆட்சிக்கு அனுப்பினுல் மணலைக் கயிருகத் திரிப்போம்—வானத்தை வில்லாக வளேப்போம்—சந்திரனையே பிடித்து வந்து தருவோம்—என்று எல்லாம் அரசியலதிகாரத்தைப் பிடிக்க அருகதையுள்ள சிங்களக் கட்சிகள் யாவும் மாயாஜால வித்தைகளை வாக்காளர்களுக்கு காட்டத்தொடங்கியுள்ளன.

கடந்த ஏழு ஆண்டுகாலமாக, தமிழ்தேசிய இனத்தை வெறும் கிள்ளுக் கீரை போல நினைத்து — தமிழ் பேசும் மக்களை மீளா அடிமைகளாகப் பிரகடனப்படுத்தும் புதிய அரசியற் திட்டத்தை தம் இஷ்டப்படி ஏதேச்சாதிகாரமாக வகுத்து—அதனை தமிழ் மக்கள் மீது துப்பாக்கி முனையில் பலவந்தமாகத் திணித்து — தமிழ் இளைஞர்களை காரணமின்றி சிறைக்குள் தள்ளி — தமிழ் சமுதாயத்துக்கு சொல்லொணுக் கொடுமைகளையும், துன்பங்களையும் இழைத்து வரும் ஆளும் சிறீலங்கா சுதந்திர —கப்யூனிஸ்ட் கட்சிகளும்; பௌத்தத்தை மட்டுமே அரசாங்க மதமாக்கவேண்டுமென்று அரசியல் நிர்ணய சபையில் வாதாடிய — தமிழ் மக்களின் பிரதேசப் பாதுகாப்புக்கு வழிவகுத்த பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம் மீண்டும்கொண்டுவரப்பட்டால் அதை எதிர்த்து மறுபடியும் யாத்திரை செய்யப்போவதாக மார்தட்டிய — ஐக்கிய தேசியக்கட்சியும்; தமிழ்பேசும் மக்களை தாழ்ந்த நிலைக்குத் தள்ளிய புதிய அரசியல் சட்டத்தை வரைந்த லங்கா சமசமாஜக்கட்சியும்; தேர்தல் காலம் நெருங்க. தமிழ் மக்களின் நண்பர்களாக — தமிழ் மக்களின் உரிமைப்பாதுகாவலர்களாக — வேஷமிட்டு வீதியுலாவரத்தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் தமிழ்பேசும் மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலிலே எவ்வாறு நடந்துகொள்ளப்போகிறூர்கள் — எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்ற பொறுப்புவாய்ந்த கேள்வி ஒன்று எழுகிறது.

தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்தவரை— பொதுத்தேர்தல் முக்கியமானதொன்றல்ல என்ற ஒரு கருத்து ஒரு சிலரால் அண்மைக்காலமாக முன்வைக்கப்பட்டுவருகிறது. இக்கருத்தை சரியானதென்று நாம் ஏற்றுக்கொள்ள முடியாது!

பொதுத்தேர்தல்களில் பங்குபற்றி—தேசிய அரசுப் பேரவைக்கு செல்வதனுல் — சிங்களப் பெரும்பான்மையினரைக்கொண்ட தேசிய அரசுப் பேரவையில்—தமிழ் பேசும் பிரதிநிதிகளால் அதை ஒரு பிரசார மேடையாகப் பயன்படுத்துவதைத்தவிர வேறு எதுவும் சாதிக்க முடியாதென்பதும்—தேசிய அரசுப் பேரவையை மட்டும் பயன்படுத்தி தமிழ்ஈழத்தின் விடுதலையை வென்றெடுக்க முடியாது என்பதும் உண்மைதான்! ஆனுல் அதற்காக பொதுத்தேர்தலின் முக்கியத்துவத்தைப் புறக்கணித்துவிட முடியாது!

அதுவும் தமிழ்ஈழக் கொள்கையை — தனிநாடு கொள்கையை — தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்ட பின்னர், தமிழ்ஈழப் பிரதேசங்களில் நடைபெறவிருக்கும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் அளிக்கவிருக்கும் தீர்ப்பை—தமிழ் பொது மக்களின் விடுதலை உணர்ச்சி வேகத்தின் நாடித்துடிப்பை —அறிந்துகொள்வதில் உலகம் முழுவதுமே வைத்தகண் வாங்காமல் ஆர்வத்துடன் இருந்துவருகிறது.

வட்டுக்கோட்டைப் பிரகடனத்துக்கமைய — தனிநாடு கொள்கைமீதான ஒரு பொதுசன வாக்கெடுப்பாக அடுத்த பொதுத்தேர்தலை பயன்படுத்தவிருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பகிரங்கமாக அறிவித்த பின்னர்—தமிழ் ஈழத்தின்மீது உலகத்தின் கவனிப்பு இன்னும் அதிகரித்திருக்கிறது!

இதற்கு முன்னர் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் எல்லாம் தமிழரசுக்கட்சி சமஷ்டிக் கோரிக்கையையும், தமிழ் காங்கிரஸ்கட்சி மொழிச்சமத்துவத்தையுமே தமிழ்மக்கள் முன்னுல்வைத்துப் போட்டியிட்டிருக்கின்றன. எதிர்வரும் பொதுத்தேர்தலில்தான், இருகட்சிகளும் இணைந்து, தமிழர் விடுதலைக்கூட்டணியாகியபின்னர் "தனிநாடு" கொள்கை முதன்முதலாக முன்வைக்கப்படவிருக்கிறது. எனவே, இந்த நிலையில் தமிழ்ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், அடுத்த பொதுத்தேர்தல் மிகவும் முக்கியத்துவமடைவதுடன், சர்வதேச கவனிப்புக்குள்ளாகவும் இருக்கிறது!

ஆகவே—இதையுணர்ந்து, "பொதுத்தேர்தல் எமக்கு முக்கியமானது அல்ல" என்ற தவருன சிந்தனையால இழுத்துச்செல்லப்படாமல் தேர்தல் நடைபெறும்போது தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ஈழத்தின் ஒவ்வொரு தொகுதியையும் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் கைப்பற்றுவதற்கு ஒற்றுமையுடனும், கட்டுப்பாட்டுடனும், சுறுசுறுப்புடனும் இப்பொழுதிருந்தே பணியாற்றவேண்டும்!

தேர்தலில் எத்தனை தொகுதிகளை கூட்டணி கைப்பற்றப்போகிறது என்பது முக்கியமானதுதான்; ஆனுல் அதையும்விட முக்கியமானது — எத்தனை இலட்சம் வாக்குகள் கூட்டணியின் "தனிநாடு" கொள்கைக்கு கிடைக்கப்போகின்றன என்பதுதான்! எனவே ஒவ்வொரு தமிழ்பேசும் குடிமகனின வாக்கும்—கூட்டணிக்கு கிடைக்கவேண்டும். கூட்டணிக்கு கிடைக்கின்ற வாக்குகள் தனிநாடு கொள்கைக்கு கிடைக்கின்ற அங்கீகாரமாகவே கருதப்படும்!

பங்களாதேஷ் சுதந்திரப்போராட்டத்துச்கு அடிப்படைப்பலமாக — சுதந்திரப்போராட்டத்துக்கு முன் நடைபெற்ற பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் கிழக்கு பாகிஸ்தானில் அவாமிலீக் நூற்றுக்குதொண்ணூற்றென்பது வீதம் வெற்றிபெற்றதுபோல—அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத்தேர்லில் தமிழ்ஈழத்தில் தமிழர்விடுதலைக்கூட்டணி நூற்றுக்கு நூறுவீதம் வெற்றிபெற வேண்டும். அதற்காக இப்போதிருந்தே உழைக்க வேண்டும்!

அத்தகைய வெற்றியை—தனிநாடு கொள்கைக்கு மக்களின் அங்கீகாரத்தை—நாம் நூற்றுக்குநூறு வீதம் பெற்றுவிட்டால், விடுதலைப்போராட்டத்துக்கு அதுவே நல்லதோர் அடிப்படையாக விளங்கும். இந்த உண்மையை தமிழர் விடுதலைக்கூட்டணியும் தமிழ் மக்களும் உணர்ந்து செயற்படுவார்களாக!

# தமிழ்ஈழக் கோரிக்கை மீதான பொதுசன வாக்கெடுப்பு வெற்றியடைய நாம் என்ன செய்யவேண்டும்?

**''அடுத்த பொதுத் தேர்தல் தமிழ் நாட்டுக்கான பொதுசன வாக்கெடுப்பு'' என்று நம்மில் பலர், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் உட்பட, பொது மேடைகளில் பேசி வருகின்றோம். மேடைகளில் மாத்திரமின்றி சாதாரண உரையாடல்களிலும் கூறிவருகின்றோம்; இதை வெளிநாட்டுப் பத்திரிகைகள் கூட வெளியிட்டுள்ளன.**

ஆனுல், இப் பொதுசன வாக்கெடுப்பு நிகழும்போது அது தமிழ் நாட்டுக்கோரிக்கைக்கு அமோகமான ஆதரவைவெளிப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சியில் நம்மில் எத்தனை பேர், த. வி. கூட்டணியின் தேசியப் பேரவை உறுப்பினர்கள் உட்பட, ஈடுபட்டிருக்கின்றனர்?

தற்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரியாமல் இருந்து வரும் தமிழ் மக்களை எம்மோடுசேர்த்துக் கொள்வதற்கு நம்மில் எத்தனைபேர் முயற்சி செய்து வருகின்றனர்? ஏன் நம்மில் எத்தனைபேர், நம்மோடு இருக்கின்றவர்களே பிரிந்து போகாமல், பிரித்து எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதைப் பார்த்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றனர்? இவற்றைச்செய்வதில் முழு மூச்சாக ஈடுபடாமல், அடுத்தபொதுத்தேர்தல் தமிழ் நாட்டுக்கான பொதுசன வாக்கெடுப்பு என்று மேடைகளிலும் தங்கள் வீடுகளிலும் பேசிக் கொள்வதினுல் பலன் ஏற்பட்டு விடுமா?

நாம் பேச்சாளர்களாக அல்ல செயலாளர்களாக மாறவேண்டும்; பார்வையாளர்களாகவல்ல வேர்வையாளர்களாக, அதாவது வியர்வை சிந்தி உழைப்பவர்களாக, மாறவேண்டும். அப்பொழுதுதான் அடுத்த பொதுத்தேர்தலில், அது எப்பொழுது வந்தாலும்சரி, தமிழர் பொதுசன வாக்குகளின் மூலம், தமிழ்நாடு கோரிக்கையை இந்த நாட்டுச் சிங்கள மககளுக்கும் அவர்களுடைய அரசாங்கத்துக்கும் உலகமக்களுக்கும் ஆணித்தரமாக எடுத்துக் காட்ட முடியும். மேடைகளிலும் தங்கள் வீடுகளிலும் பேசுவதினுலல்ல.

புதிய அரகியல் திட்டத்தைத் தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காக தந்தை செல்வா அவர்கள் தனது தே. அ. பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகி ஒரு இடைத்தேர்தலை ஏற்படுத்தி அதில் போட்டியிட்டதையும் அதில் அவர் வெற்றிபெற்றதையும் யாவரும் அறிவர். ஆனுல், அந்தப் போட்டியில் அவருக்கு எதிராக, புதிய அரசியல் திட்டத்தை, தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்று கூறிவந்த அரசாங்கத்தின் சார்பில் போட்டியிட்டவருக்கு 9,457 வாக்குகளும் சுயேச்சையாகப் போட்டியிட்டவருக்கு 185 வாக்குகளும் கிடைத்திருந்தன. ஆனுல் மேடைகளிலும் நம்மத்தியில் எமக்கு எதிராகப் போட்டியிடுபவர்களுக்கு அவ்வளவு வாக்குகள் கிடைக்கமாட்டாது என்று கூறிவந்தோம்; நம்பிக்கொண்டுமிருந்தோம். தமிழ்மக்கள் புதிய அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறூர்கள் என்று கூறிய அரசாங்கத்தின் சார்பில் போட்டியிட்டவருக்கு அத்தேர்தலில் முழுதாக அளிக்கப்பட்ட 35,737 வாக்குகளில் 9,457 வாக்குகள் கிடைத்தது எப்படி என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ்மக்கள் தமிழர் கூட்டணியை ஏற்படுத்தியிருந்த பின்பும் திரு. அழகக்கோன் அவர்களின் மறைவால் ஏற்பட்டிருந்த இடைத்தேர்தலில் தமிழர் கூட்டணி வேட்பாளர் தோல்வியுற்றது எப்படி என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்கள் புதிய அரசியல் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்ற அடிப்படையில் ஒரு தமிழரும் தந்தை செல்வநாயகத்துடன் போட்டியிட முன்வரமாட்டார்கள் என்றும், அப்படி யாராவது போட்டியிட்டால் அவர் ஒரு சொற்ப வாக்குகளையே பெறுவார் என்றும் நாம் பேசிக்கொண்டிருந்தோம். அரசாங்கத்தை ஆதரித்தவர்களோ பேச்சில் ஈடுபடாமல் செயலில் ஈடுபட்டிருந்தார்கள். புதிய அரசியல் திட்டத்தை ஆதரிக்காதவர்கள், அதை முற்ருக வெறுத்தவர்களில் சிலரின் வாக்குகளையும் எப்படியோ பெற்றுக்கொண்டார்கள்! அப்படியேதான் மன்னுர் இடைத்தேர்தலிலும் நடைபெற்றது.

இப்பொழுது, அடுத்த பொதுத்தேர்தல் தமிழ் நாட்டுக்கான பொதுசன வாக்கெடுப்பு என்று கூறிவருகிறோம். ஆனுல், வாக்கு எடுக்கப்பட்ட பின்பு அதில் எமக்கு எதிராக எத்தனை வாக்குகள் விழக்கூடும் என்பதை எண்ணிப்பார்க்கின்றோமா? எதுவோ ஒவ்வொரு தொகுதியிலும் அரும்பொட்டாகவென்ருலும் வென்ருல் போதும் என்ற நினைப்பில் இருந்து வருகின்றோம் போலத் தெரிகின்றது. அடுத்த பொதுத்தேர்தலை தமிழ் நாட்டுக்கான பொதுசன வாக்கெடுப்பு என்று நாம் எடுத்துக்காட்டுவதென்ருல் அதில் நாம் ஒவ்வொரு தொகுதியையும் வென்ருல் மட்டும் போதாது ஒவ்வொரு தொகுதியிலும் அதிகப்படியான வாக்குகளைப் பெறவேண்டும். எமக்கு எதிராகப்போடப்படும் வாக்குகள் ஆகக் குறைந்தனவாக இருக்க வேண்டும். இதற்கு எம்முடையவர்களே, தமக்குத் தேர்தலில் நிற்பதற்குச் சீட்டுத் தரவில்லை என்பதினுல் எமது அபேட்சகரை எதிர்த்துப் போட்டியிடாமல் இருக்கவேண்டும், மற்றது, நாம் எல்லோரும் நன்ருக, உழைத்து ஒவ்வொரு தமிழ் மக்களையும் எமதுவேட்பாளர்களுக்குப் தமது வாக்குகளைப்போடச்செய்ய வேண்டும.

இந்தக் குறிக்கோளை அடைவதற்கு நாம், நம்மில் ஒவ்வொருவரும், காலதாமதம் செய்யாமல் உடனே செயலில் இறங்கவேண்டும். வாய்ச் சொல்லளவில் நின்று பயன் இல்லை. காங்கேசன் துறை இடைத்தேர்தலில் அரசாங்கத்தின் அபேட்சகர் 9,457 வாக்குகள் பெற்றிருந்ததையும், மன்னுர் இடைத்தேர்தலில் த. கூட்டணி அபேட்சகர் தோல்வி அடைந்ததையும் எண்ணிப் பார்த்துச் செயலாற்ற வேண்டும்.

இல்லை என்ருல், அடுத்த பொதுத்தேர்தல் தமிழ்நாட்டுக்கான பொதுசன வாக்கெடுப்பு என்று சொல்லுவதை விட்டுவிட வேண்டும். அப்படி நாம் சொல்லி, அடுத்த பொதுத்தேர்தலில், எமக்கு எதிராக கணிசமான தமிழ் மக்களின் வாக்குகள் விழுந்துவிட்டால் அதுவே எமக்கு அவமானமாகப் போய்விடும், நாம் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றிபெற்ருலும் கூட. எமக்கு ஆதரவாக கூடிய அதிகப்படியான வாக்குகள் கிடைத்தால்தான் அரசாங்கம் எமது கோரிக்கையை மறுக்கமுடியாமல் இருக்கும். உலகமும் அதைக் கவனத்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அறிவித்தல் கிடைத்தால் மட்டுமே நீதிமன்றத்துக்கு வருமாறு உத்தரவு

வட்டுக் கோட்டையில் சென்ற ஆண்டு மே 14, 15ம் நாட்களில் நடைபெற்ற மாநாட்டின்போது இடம் பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக 11 தமிழ் இளைஞர்கள் மீது பொலிசார் தொடுத்திருந்த வழக்கு 26-1.77ல் மல்லாகம் நீதி மன்றத்துக்கு விசாரணைக்கு வந்தபோது, பொலிசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யத் தயாராக இல்லாததையடுத்து இனிமேல்பொலிசார் அறிவிக்கும்போது நீதி மன்றத்துக்குவந்தால்போதுமென்று எதிரிகளுக்கு அறிவித்து, நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார்.

24-5-76ல் நடைபெற்ற ஹர்த்தாலின்போது சட்டத்தை மீறி நடந்ததாக கைது செய்யப்பட்ட பண்ணுகத்தைச்சேர்ந்த 10 இளைஞர்கள் சம்பந்தப்பட்ட வழக்கிலும் இதே உத்தரவை நீதவான் பிறப்பித்து வழக்கை ஒத்திவைத்தார். இவ்வழக்குகளில் சட்டத்தரணி திரு. அ. அமிர்தலிங்கம் இளைஞர்களின் சார்பில் ஆஜரானுர்.

## துரையப்பா கொலை வழக்கு தொடர்ந்து வாதம்!

துரையப்பா கொலை வழக்கில் எதிரிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஏழு தமிழ் இளைஞர்களின் சார்பாகவும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எழுத்தாணை மனு மீது 18-1-77 தொடக்கம் திரு. எஸ். நடேசன் கியூ. சி. வாதம் புரிந்து வருகிறுர். 18, 19, 20, 21, 25, 26, 27ம் திகதிகளில் திரு. நடேசனின் சட்டவாதம் நிகழ்ந்தது. தொடர்ந்து முன்னுள் உதவி சொலிசிட்டர் ஜெனரல் திரு. வி. எஸ். ஏ. புள்ளை நாயகம் தனது சட்டவாதத்தை நிகழ்த்திவருகிறுர்:

## தமிழ் ஈழக்கோ...

—4-ம் பக்கத் தொடர்

துக்கு எடுக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மக்களிடையே தன்னம்பிக்கை பிறக்கும்; துணிவு ஏற்படும்.

ஆகவே, அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே போடச் செய்வதற்கு இன்றிலிருந்தே நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். இது, தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்களினதோ, தேசியப் பேரவை உறுப்பினர்களினதோ, தேசியப்பேரவை உறுப்பினர்களாக விருப்பங் கொண்டிருப்பவர்களினதோ பொறுப்பு என்று எண்ணி நாம் இருந்துவிடக் கூடாது. இது தமிழ் மக்கள் ஒவ்வொருவரின் கடமையும் ஆகும் குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பான கடமையாகும். இக்கடமையை ஒவ்வொருவரும் ஒருவரைவிட மற்றவர் மேலாகச்செய்ய வேண்டும்.

வெற்றி நமதே! வாழ்க தமிழ் ஈழம்.

—ஓர் அவதானி

## அண்ணு விழா

எதிர்வரும் 3-2-77ல் பேரறிஞர் அண்ணு நினைவுதினக் கருத்தரங்கொன்றை யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையில் நடத்துவதற்கு தமிழ் இளைஞர் பேரவையின் ஈச்சமோட்டைக் கிளை ஏற்பாடு செய்துள்ளது. த. இ. பேரவை, தமிழர் விடுதலை கூட்டணி பிரமுகர்கள் இதில் உரையாற்றுகின்றனர்.

## ஸ்ரீ ஞானனந்த ஜெயந்தி விழா

ஸ்ரீ ஞானனந்தகிரி சுவாமிகளின் ஜெயந்திவிழா 28-1-77 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 9.00 மணிவரை கொழும்பு ஸ்ரீ ஞானனந்த சேவா சமாசத்தினர் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோவில் மண்டபத்தில் சுவாமி ஸ்ரீ ஹரிதாஸ கிரி அவர்களின் தலைமையில் கொண்டாடுகின்றனர்.

## கம்பளையில் ஈழவேந்தன்

. கம்பளை இந்துஇளைஞர் மன்றத்தின் ஆதரவில் 29-1-77 ஞாயிற்றுக்கிழமை மேற்படி மன்றத்தலைவர் திரு. கே. ஜி. மகாதேவா தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் 'தமிழன் கண்ட நெறி' எனும் தலைப்பில் திரு. ஈழவேந்தன் பேச விருப்பதாக மேற்படி மன்றச் செயலாளர் திரு. இ. வி. ஜயேந்திரன் தெரிவிக்கின்றார்.

# வாசகர் கருத்து

## சுதந்திரன் எழுதியது சரியானதே!

ஆசிரியர் அவர்கள்
சுதந்திரன்

ஐயா!

சுதந்திரன் 23-1-77ல் "கூட்டணித் தலைவர்களுக்கு எதிராகச் சுதந்திரனும தூபம் போடுகிறதா?" என்று நண்பர் ஒருவர் வாசகர் கருத்துப் பகுதிக்கு எழுதியதைப் பார்த்தேன். "நுனிப் புல் மேய்ந்த நிலையிலோ", "வால்மட்டும் பூரவில்லை" என்ற நிலையிலோ இல்லாது விடயத்தை அலசி ஆராய்ந்த பின்னரே ஒருவர் மீது அதுவும் பொறுப்பு வாய்ந்த ஒரு பத்திரிகை ஆசிரியர் மீது குற்றச்சாட்டைச் சுமத்துவது அறிவுடமை.

26-12-76 சுதந்திரனில் "கட்டுப்பாடு எங்கே?" மிகக்கண்ணியமாகக் கண்டிக்கப்பட்டதற்கு ஆசிரியரின் பெருந்தன்மையைப் பாராட்டவேண்டும். ஆனல் இன்னும் ஒருபடி மேலே சென்று கண்டித்திருக்க வேண்டும். "இடிப்பாரையில்லா ஏமரா மன்னன் கெடுப்பாரிலானுங் கெட்டழிவதன்முன் இடிக்குந் துணையாவார்" தம் கடமையை அரசியல் அறத்துக்கமைய நின்று ஆசிரியர் அறிவூட்டியமை போற்றுதலுக்குரியதே.

1976 மே மாசத்தில் நடைபெற்ற 'வட்டுக்கோட்டை கூட்டணி மகாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானமானது தனிநாட்டுக் கொள்கை; காங்கேசன்துறைத்தொகுதி வாழ் மக்களின் அமோக அங்கீகாரத்துடன் பேரவையில் தீர்மான வடிவிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே தனிநாடும், அறப் போருமே கூட்டணியின் திட்டவட்டமான கொள்கையாகும்.

1976ம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போதும் தந்தை செல்வா அவர்கள் கூட்டணியின் கொள்கையை தனிநாடும், அறப்போருமே என்பதைப் பேரவையில் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருப்பதும், கூட்டணிப் பேரவை உறுப்பினர் சிலர் தீர்மானத்துக்கமையாது கட்டுப்பாடற்ற முறையில் பேரவையில் நிகழ்த்திய சொற்பொழிவுகளை நாளேடுகளிற் பார்த்தவர்கள் கூட்டணியின் கட்டுப்பாட்டினையும் கொள்கைப் பற்றினையும் பற்றி யாது கருதுவர்?

இயக்கத்தின் தலைவர் பேரவையில் எக்கொள்கையினை முன்வைக்கின்றுரோ அதற்குரிய காரணங்களை ஆணித்தரமாக விளக்கி ஊழி பெயரினுந் தாம் பெயராது நின்று உறுதிப்படுத்துவதே உறுப்பினர் கடமையும் கட்டுப்பாடுமாகும்.

திரு. வி. தர்மலிங்கம் அவர்களைப்பற்றி பிறர் தவருக நினைக்க சுதந்திரன் வழி வகுப்பதாகவும் எழுதியுள்ளார்.

அமரர் வன்னியசிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் வகித்த இடத்தை அவரின் மறைவுக்குப்பின் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும், அமிர்தலிங்கத்தின் இடத்தை திரு. வி. தர்மலிங்கம் அவர்களும் சமாளித்து வருவதும், தனிப்பட்ட முறையில் சிறையிலுள்ள இயக்க இளைஞர்கள் குடும்பங்களுக்கு ஆறுதல் அளிப்பதும், இயக்கப்பணிகளை இயன்றவரை அகில இலங்கை ரீதியில் செயற்படுத்துவதும் வரவேற்றுப்போற்ற வேண்டிய நிகழ்ச்சிகளாகும். அதுமட்டுமல்ல இலங்கை அரசியல் பேரவை வரலாற்றில் அவருக்கு தனியான ஓர் இடமுண்டு. தன் சக்திக்கு அப்பால்இயங்குபவர்.

ஆனல் இன்று இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் அரசியல் கொந்தளிப்பான சூழ்நிலையில் தவித்துக் கொண்டிருப்பதும் இளைஞர்கள் உணர்ச்சி வசமாகித் துடிதுடித்துக் கொண்டிருப்பதும் அகில உலகுமறிந்த உண்மை; இலங்கை அரசும் சரியாகப் புரிந்துகொண்டு தான் மீண்டும் ஒரு "மன்மதக் கணையை" ஏவியுள்ளது. இதனை—அரசியல் ரீதியாக, கூட்டணியின் பொதுக் குழு, செயற்குழு மூலம் அலசி ஆராய்ந்து தீர்க்கமான முடிவை எடுத்து, தேவைப்படின் தந்தை செல்வா அவர்கள் அறிக்கை விடுவதே ஜனநாயகப்பண்பு. நெற்றிக்கண்ணைக் காட்டினுலும்......;

இத்தனை விடயங்களையும் வெளிக்காட்டாது பண்போடு 'கட்டுப்பாடு எங்கே' என புத்தியூட்டியது பத்திரிகை ஆசிரியனின் சிறந்த பணியாகும்.

—வித்துவான் வ. கந்தையா
கொக்குவில் மேற்கு

## சிறைச்சாலைகள் சந்திக்கின்றன!

—காசி ஆனந்தன்

● கவிஞர் காசி ஆனந்தனின் தம்பிகள் இருவர் (சிவஜெயம் சுதர்சன்) ஒன்றரை ஆண்டுகால சிறை வாழ்வின் பின்னர் சென்ற 26-1-77ல் வெலிக்கடைச்சிறையிலிருந்து விடுதலை செய்யப் பட்டுள்ளனர். இவர்கள் கைதுசெய்யப்பட்ட பின்னர் சுமார் ஓராண்டு காலம் கண்டி போகம்பரைச் சிறைச்சாலையிலேயே வைக்கப் பட்டிருந்தனர். அந்த நேரத்தில் கவிஞர் காசி ஆனந்தன் வெலிக்கடை சிறையிலிருந்தபடியே போகம்பரைச் சிறையிலிருந்த தனது தம்பியரை நினைந்து பாடிய தழல் வீசும் கவிதையொன்றைக் கீழே தருகிறேம். கவிஞர் காசி ஆனந்தன் வெலிக்கடை வெஞ்சிறைக் கோட்டத்திலேயே இன்னமும் இருந்து வருவது தெரிந்ததே.

வெறிச்சிங்களத்தின் கண்டிச் சிறையகம்
வீழ்ந்த என் உடன்பிறப்புக்காள்!
தெறிக்கும் விழிக்கனல் பறக்கும் புலிகளே
தெய்வம் ஒன்றுண்டு நம்புங்கள்!
பொறிச்சிறை நம்மை என்செயும் பார்ப்போம்!
போர்க்களம் எமக்கென்ன புதிதோ?
குறிக்கோள் இனியது கொண்டோம் தம்பிகாள்!
கூத்தாடுவோம்! இது பொன்னுள்!

ஆழமா கடலின் அலைகளே; இருங்கள்!
அறம் காத்தல் நம்கடன் அன்ருே?
கோழைகள் அல்லோம் கொடுஞ்சிறைக்கோட்டம்
குளிர் மலர்த் தோட்டம் என்ருர்ப்போம்!
ஈழமா மண்ணில் எழில்விடு தலைநாள்
இருத்தாமல் நாம் மடிவோமா?
ஊழையும் வெல்லும் உளங்களே! இருங்கள்'
ஒருபெருஞ் செயல் செயப் பிறந்தோம்!

எந்தமிழ் ஈழம் ஒளிபெற நாங்கள்
இருட்சிறை ஆடுதல் இன்பம்:
வெந்தழல் ஆடி விழிமழை தோய்ந்து
வெல்லுதல் விடுதலை கண்டீர்!
சிந்துக முறுவல்! மெய்சிலிர்த் திருங்கள்!
செந்தமிழ் மூச்சென்ன சிறிதோ?
வந்தெதிர் கொள்ளும் துயரெலாம் ஏற்போம்!
வைரநெஞ் சங்களே! வாழி!

கொள்ளையாம் வீரம் கொந்தளித்தாடும்
குட்டுவன் தமிழ்க்குலச் சேய்காள்:
உள்ளம் மகிழ இசை ஓது மின்கள்!
உவகையில் ஆடிக் களிப்பீர்!
பிள்ளைகளா பெற்ருள் எமைப்பெற்ருள்
பெருமைகள் அல்லவா பெற்ருள்!
வெள்ளம் படைப்போம்! புயல்படைப்போம்! நாம்
விடுதலை படைப்போம்! இருங்கள்!

நெடும்போர் ஆடும் நீதி உயிர்களே!
நெருப்பினில் பூத்த நெஞ்சங்காள்!
கொடுஞ்சிங்களத்தின் வெலிக்கடைக்கோட்டம்
குடியிருக்கும் உங்கள் அண்ணன்
இடும்பணி கேளீர்! கண்விழித்திருங்கள்!
இன்னுயிர் தான் விலை எனினும்
கொடுங்களடா என் தம்பிகாள்! கொடுங்கள்!
கூத்தாடுவேன் உடன் பிறப்பே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிம்மி கார்ட்டரின் வெள்ளை மாளிகை பிரவேசம்!



ஜிம்மி கார்ட்டர்
நல்ல ஆரம்பம்

அமெரிக்க மக்களுக்கும், உலக மக்களுக்கும் புதிய நம்பிக்கைகளை ஊட்டியபடி — அமெரிக்காவின் முப்பத்தொன்பதாவது குடியரசுத் தலைவராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டு இம்மாதம் 20-ம் திகதி வெள்ளை மாளிகையில் குடிபுகுந்திருக்கிறார் முன்னாள் நிலக்கடலை வர்த்தகரான திரு. ஜிம்மி கார்ட்டர். வியட்னும் போரால் ஏற்பட்ட விளைவுகள், வாட்டர்கேட் ஊழல், லொக்ஹீட் ஊழல் போன்ற பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளாலும் முடைநாற்றமெடுத்து வந்த அமெரிக்க அரசியல் 'கறைபடியாக் கரமுடைய' ஜிம்மி கார்ட்டரின் வெள்ளைமாளிகைப் பிரவேசத்துடன் புனிதமடையுமென்று அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

தாம் பதவியேற்ற நாளிலேயே, இதுவரை அமெரிக்காவின் முந்திய குடியரசுத் தலைவர்களால் பின்பற்றப்படாத பல புதிய நடைமுறைகளையும் சம்பிரதாயங்களையும் ஜிம்மி கார்ட்டர் ஏற்படுத்தி பலரது கவனத்தையும் ஈர்த்திருப்பதோடு தாம் மிகவும் எளிமை மிகுந்தவர் என்பதையும் உலகுக்கு தமது செயல்மூலம் பறைசாற்றிக்கொண்டு விட்டார்.

பழைய சம்பிரதாயங்களையும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் உதறித்தள்ளிவிட்டு வழக்கமான கவச வாகனத்திலும் ஏறிச்செல்ல மறுத்து — இரண்டு மைல் தூர இராஜபவனி வீதியை திரு. ஜிம்மி கார்ட்டர் நடந்தே சென்று வெள்ளை மாளிகையில் சத்தியப் பிரமாணம் எடுத்தது அவரது எளிமைக்கும், மக்கள் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். இது கார்ட்டரின் முதலாவது புதுமை.

குடியரசுத் தலைவராக பதவியேற்றதையடுத்து— அமெரிக்க மக்களுக்கு மட்டுமன்றி—உலக மக்களுக்கும் சிறப்புச் செய்தியொன்றை ஜிம்மி கார்ட்டர் விடுத்திருக்கிறார். அமெரிக்காவின் முந்திய குடியரசுத் தலைவர்கள் யாரும் இப்படிச் செய்ததில்லை. இது கார்ட்டரின் இரண்டாவது புதுமை.

உலகில், வறுமை, பசி, பிணி அரசியல் அடக்குமுறைகள் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமையாகும்; இந்த உரிமைகளுக்கு அமெரிக்கா மட்டும் உத்தரவாதம் அளிக்க முடியாது; மனித இனத்தின் மேற்கண்ட எதிரிகளை வீழ்த்த ஏனைய நாடுகளுடன் சேர்ந்து அமெரிக்காவும் ஒத்துழைக்கும் என்ற உறுதியை அவர் உலக மக்களுக்கு தந்திருக்கிறார்.

குடியரசுத் தலைவராக பதவி ஏற்கும் வேளையிலும் தமக்கு கல்வியூட்டிய உயர்நிலைப் பள்ளி ஆசிரியையான செல்வி. யூலியா கோல்மனின் பின்வரும் போதனையொன்றை ஜிம்மி கார்ட்டர் மறக்காது நினைவுபடுத்திக்கொண்டார்.

"We must adjust to changing times and still hold to unchanging Principles"

—அதாவது "மாற்ற முடியாத அடிப்படை நோக்கத்தைக் கைவிடாத அதே சமயத்தில் கால மாற்றத்துக்கு தகுந்ததாக நம்மை நாம் சமாளித்துக் கொள்ள வேண்டும்" என்ற கருத்தை வெளியிட்டதன் மூலம் தமது ஆட்சி எப்படியிருக்கப்போகிறது என்பதை சூசகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார் ஜிம்மி கார்ட்டர். அதே நேரத்தில் பைபிளிலிருந்து தீர்க்கதரிசி மிக்கா (Micah) என்பவரின் ஓர் உபதேசத்தையும் கார்ட்டர் எடுத்துக் காட்டியிருக்கிறார். "ஓ மனிதனே, எது நல்லது என்பதை இறைவன் உனக்கு காட்டியிருக்கிறான்; நீதியை செய்வதையும், கருணையை நேசிப்பதையும், கடவுளுடன் மரியாதையாக நடப்பதையுமே உன்னிடமிருந்து அவன் எதிர்பார்க்கிறான்"— என்ற அந்த மிக்கா வாசகத்தை நினைவூட்டி அவர் தமது முதல் உரையை நிகழ்த்தியிருக்கிறார். தன்னுடைய பதவிக்காலம் முடிவடையும் போது, தீர்க்கதரிசி மிக்காவின் வார்த்தைகளின்படியே நாம் செயற்பட்டுள்ளோம் என்று மக்கள் சொல்லும்படி தமது ஆட்சி அமையும் என்று அவர் பிரதிக்ஞை எடுத்திருக்கிறார்.

இன, மத, நிற வேறுபாடுகளை ஒழித்துக்கட்டி வேற்றுமையில் ஒற்றுமை காணுதல் — பலங் குறைந்தவனுக்கும், பலமுள்ளவனுக்கும், ஏழைக்கும் பணக்காரனுக்கும், சட்டத்தின்முன் சமத்துவம்— ஒற்றுமை — உலக சமாதானம் — போன்ற கொள்கைகளுக்காகப் பாடுபடப்போவதாக கார்ட்டர் உறுதியெடுத்திருக்கிறார்.

குடியரசுத் தலைவராக பதவியேற்று வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தவுடன் கார்ட்டர் செய்திருக்கும் முதலாவது பாராட்டப்படக்கூடிய பணி— வியட்னும் யுத்தத்தில் கலந்து கொள்ள மறுத்ததற்காக கைதுசெய்யப்பட்டு, முன்னைய அரசாங்கத்தினுல் சிறை வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களை நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யும் உத்தரவில் கையெழுத்திட்டதுதான்!

இவ்வாறு புதிய ஆரம்பங்களுடன் பதவிப்பிரமாணம் எடுத்துள்ள கார்ட்டர், தமது நிர்வாகத்தில் ஊழல்களும் சீர்கேடுகளும் இல்லாமற் செய்வதற்காக மற்றோர் புதிய முன்மாதிரியை காட்டியிருக்கிறார். கார்ட்டரின் 'நல்லொழுக்கக்கோவை' ஒன்றை அவர் புகுத்தியுள்ளார். இதன்படி அவர் பதவியேற்பதற்கு முன்னர் தனது தனிப்பட்ட சொத்து விபரங்களை பகிரங்கப்படுத்தியிருப்பதுடன், தன்னுடைய நிலக்கடலை வர்த்தகத்தை "ட்ரஸ்ட்" ஒன்றிடம் கையளித்திருக்கிறார். இதே போலவே தம்முடைய அமைச்சரவையைச் சேர்ந்த சகல அமைச்சர்களும்— எல்லா உயர்தர அதிகாரிகளும் செய்துகொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

கார்ட்டர் முன்வைத்திருக்கும் இந்த முறை, அமெரிக்க அரசியலுக்கு ஒரு புதுமையாகும். திறந்த மனதுடன் அமெரிக்க அரசியலை சீர்திருத்த முன்வந்திருக்கும ஜிம்மி கார்ட்டரை அங்குள்ள பிற்போக்குவாதிகளும், நிற, இன வெறியர்களும் எவ்வளவு தூரம் விட்டுவைக்கப்போகிறார்கள்



என்கிற அச்சம் தரும் கேள்வியும் எழத்தான் செய்கிறது.

எப்படியிருந்த போதிலும் ஜிம்மி கார்ட்டரின் தலைமை, கென்னடி காலத்துக்கு பிந்திய வரலாற்றில் ஒரு திருப்பு மையமாகவே அமையப் போகிறது!

கார்ட்டரின் தலைமையில் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் உள்ள உறவு மறுபடியும் நெருக்கமடையக் கூடும் என்று எதிர்பார்க்கலாம். இதற்குப் பிள்ளையார் சுழி போடுவது போல—இந்தியாவை "எமது இதயத்திலிருக்கும் நாடு" என்று கார்ட்டர் குறிப்பிட்டிருப்பது சுட்டிக்காட்டத் தக்கது!

## ● இந்திராவுடன் மோத புதிய அணி!
## ● கருணாநிதியின் நியாயமான கோரிக்கை
## ● பூட்டோவுக்கு ஒரு சவால்!



ஜெயப்பிரகாசர்;
''பாஸிஸத்துக்கும் ஜனநாயகத்துக்கும் போட்டி''

மார்ச்சில் நடைபெறவிருக்கும் இந்தியப் பாராளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் மளமளவென்று நடைபெற்று வருகின்றன. கடந்த 19 மாதங்களாக அவசரகாலச் சட்டத்தினுல் அடக்கியொடுக்கப்பட்டிருந்த அரசியல் உணர்வுகள் இப்போது மறுபடியும் சூடுபிடித்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது. இந்தியாவின் ஆளுங்கட்சியாகவுள்ள இந்திரா காங்கிரசும், எதிர்க்கட்சிகளும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் வேகமுடன் செயல்பட்டுவருகின்றன.

கம்யூனிஸ்ட் அல்லாத நான்கு எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்திரா காங்கிரஸ் எதிர்ப்புக்கூட்டணியொன்றை நிறுவியிருக்கின்றன. பழைய காங்கிரஸ், ஜனசங்கம், சோசலிஸ்ட் கட்சி, இந்திய மக்கள் கட்சி ஆகிய நான்கு கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள இந்தப் புதிய கட்சிக்கு "ஜனதா கட்சி" (மக்கள் கட்சி) என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. 80 வயதுடைய முன்னுள் உதவிப் பிரதமரும், அண்மையில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டவருமான திரு. மொரார்ஜி தேசாய் இந்தப் புதிய ஜனதா கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

இந்தப் புதிய கட்சிக்கு இந்தியாவின் முதுபெருந்தலைவர்களில் ஒருவரும், இந்திராவின் அரசியல் எதிரியும், வினோபாஜியின் சீடருமான ஜெயப்பிரகாஷ் நாராயண் தனது பூரண ஆசியையும் ஆதரவையும் வழங்கியிருக்கிறார். "ஜனநாயகக்கொலைக்கும், ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை சிறையில் அடைத்ததற்கும் ஜனநாயகமற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கும் குற்றவாளியான ஆளுங் காங்கிரஸ் கட்சி மீண்டும் தெரிவு செய்யப்படக்கூடாது; அடுத்த தேர்தலில் ஜனநாயகமா அல்லது பாஸிஸமா வேண்டும் என்பதை இந்தியா முடிவு செய்ய வேண்டும்" என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில், இந்திய அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, கடந்த பல மாதங்களாக சிறை வைக்கப்பட்டிருக்கும் இந்திய சோசலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஜோர்ஜ் பெர்னுண்டஸ் மார்ச் பொதுத் தேர்தலை இந்திய எதிர்க் கட்சிகள் அனைத்தும் பகிஷ்கரிக்கவேண்டுமென்று கருத்து வெளியிட்டிருந்தார். அவரது இந்தக் கருத்தை அவர் தலைமை தாங்கும் சோசலிஸ்ட் கட்சியே புறக்கணித்துவிட்டு, மொரார்ஜி தேசாயின் தலைமையிலுள்ள ஜனதா கட்சியில் சேர்ந்து தேர்தலில் போட்டியிட முடிவு செய்ததையடுத்து, சோசலிஸ்ட் கட்சித் தலைவர் பதவியிலிருந்து ஜோர்ஜ் பெர்னுண்டஸ் வெளியேறியிருக்கிறார்.

பொதுத் தேர்தல் அறிவிப்பையடுத்து— 19 மாதகாலமாக இருந்துவந்த இந்தியப் பத்திரிகைகள் மீதான தணிக்கை விதிகள் நீக்கப்பட்டபோதிலும், — மழை குறைந்தும், தூவானம் விட்டபாடில்லையென்றகதையாக— பத்திரிகை தணிக்கைச் சட்டம் இன்னும் அகற்றப்படவில்லை. அது அப்படியேதான் இருக்கிறது. "ஆட்சேபகரமான விடயங்கள்" பிரசுரிக்கப்படுவதை தடைசெய்யும் இந்தச் சட்டம் ஓராண்டுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை. இச்சட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கத்துக்கு விரோதமாகவும், இந்திய ஜனதிபதி, உபஜனதிபதி, பிரதமர், மாநில ஆளுனர்கள் ஆகியோருக்கு எதிராகவும் எதுவும் எழுதுவது சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தையும் அகற்றவேண்டுமென்று இந்தியப் பத்திரிகையாளர்கள் கோரியுள்ளனர்.

இந்தியச் சிறைகளில் 'மிசா' சட்டத்தின்கீழ் சிறை வைக்கப்பட்டிருந்த சுமார் 12,000 அரசியற் கைதிகளும் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர். பொதுக்கூட்டங்களுக்குவிதிக்கப்பட்டிருந்த தடைகளும் அகற்றப்பட்டுவருகின்றன.



பூட்டோ;
'அபாலி' ஒரு தலைவலி

●

தமிழ்நாட்டு முன்னுள் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான கலைஞர் கருணாநிதி, இந்தியப் பாராளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெறவிருப்பதையும், அரசியல் கைதிகள் விடுதலைசெய்யப்படுதல், பத்திரிகை தணிக்கை நீக்கம், பொதுக்கூட்டத்தடை நீக்கம், போன்ற நடவடிக்கைகளையும் வரவேற்றிருக்கிறார். 'மிசா' சட்டத்தின்கீழ் சிறை வைக்கப்பட்டிருந்த தி.மு.க. பிரமுகர்கள் பலர் விடுதலையாகவுள்ளனர்.

கலைஞர் கருணாநிதி மற்றோர் கேள்வியையும் எழுப்பியுள்ளார். இந்திய பாராளுமன்றத்துக்கான தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை அமைந்துவிட்டது என்று கூறும்போது — அந்த நியாயம் மாநில சட்ட மன்றத் தேர்தலுக்கும் பொருந்தும்; ஆகவே தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான தேர்தலும், பாராளுமன்றத்துக்கான தேர்தலுடன் சேர்த்து நடத்தப்படவேண்டும் — என்று கருணாநிதி கோரியிருக்கிறார்.

இந்தியப் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் தி.மு.க.வின் நிலையென்ன என்பது குறித்து பெப்ரவரி முதல் வாரத்தில் தி.மு.க. செயற்குழு கூடிமுடிவுஎடுக்கவிருக்கிறது.

தமிழ் நாட்டிலிருந்து இந்திய பாராளுமன்றத்துக்கு 39 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவிருக்கிறார்கள். 1971 பொதுத் தேர்தலில் 25 தொகுதிகளை தி.மு.க. கைப்பற்றியிருந்தது. மார்ச் பொதுத் தேர்தலில் தி.மு.க. வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்வது சாத்தியமில்லையென்றே பொதுவாகக் கூறப்படுகிறது. தி.மு.க. தனித்துப் போட்டியிடும், அல்லது பொதுத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கிக்கொள்ளும்— இந்த இரண்டில் ஒரு முடிவுக்கே தி. மு. கழகம் வரக்கூடும்

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்மாவை நினைப்போம்!

சுய ஆட்சிக்காக — மக்கள் ஆட்சிக்காக — தனக்கெனவாழாது பிறர்க்காகவே வாழ்ந்து உயிர்விட்டவர். தீண்டாமை என்னும் பெருநோயைத் தீர்த்தவர். வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடி வெற்றி கண்டவர். நீதியை நிலை நாட்டச் சத்தியமே ஆயுதமாகக்கொண்ட உத்தமன்! அவர்தான் மகாத்மாகாந்தி.

மகாத்மா காந்தி சட்டப் படிப்புக்காக இங்கிலாந்து சென்றபொழுது, "மது, மங்கை, மாமிசம் இவைகளை திரும்பியும் பாராதே" என்று சொல்லி வழியனுப்பி வைத்தாள் அவர் தாயார். தாயாரின் வேண்டுதலைத் தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வாழ்ந்து பெருமைக்குரியவராஞர் காந்தி.

இன்று பாரத நாட்டிலே மதுவிலக்குச் சட்டம். அதற்குக் காரண கர்த்தா மகாத்மாக் காந்தி ஆவார்.

குடியினல் கெட்டு அழிகின்ற குடும்பங்கள் எத்தனை இதன் வரலாறு நம்மிற் பலருக்கு நன்குதெரியும். ஏன், குடிப்பவர்க்குமே புரியும்! ஆனுலும் அதனைவிட்டுத் தொலைக்கமுடியவில்லையே என்ற கவலை, சக்தி இந்தக் குடிக்கு உண்டு — மதுவுக்கு உண்டு!

குடிகளை நாசஞ்செய்து ஆட்சிசெலுத்துகின்றனர் நம் ஆட்சியாளர்கள்! மதுவினல் வருமானம் தேடுகிருர்கள்!

குடிப்பவர் மனைவியின் கந்தலையும், அவர் தம் மக்களின் ஒட்டிய வயிறுகளையும் கண்டார் காந்தியார், குடித்த பிறகு குடும்பத்தலைவனின் குணத்தையும் அறிந்தார். அவன் உடம்பு தேய்வதை— மூளை வறள்வதை — பொருளாதாரச் சிக்கலில் நடைப்பிணமாக மாறிவிடும் அலங்கோலங்களைக் கண்டார். குடியினல் ஏற்படும் கொலை, கொள்ளை, குற்றங்கள்— இவைகளைக் கண்ணுரக்கண்டார் காந்தி.

கள்ளுக்கடை மறியல் என்று ஒரு போராட்டம் நடத்தினுர். அதில் வெற்றியும் பெற்ருர். இந்தப் போராட்டத்தில் காந்தியாரோடு பங்கு கொண்டவர்கள் பெரும்பாலோர் பெண்கள். அவர்களுக்குத்தானே குடும்பத்தின் பொறுப்பு மிகவும் விளங்கும்.

இதே இயக்கத்தை இன்று எமது ஈழத்தமிழ்ப் பெண்கள் நடத்தினுல் சுயஆட்சி காணத் துடிக்கும் எமது ஈழத் தமிழகத்தின் பொருளாதார மேன்மைக்கு அது மிகமிக உதவுவதாயிருக்கும்.

"சுய ஆட்சி தருகிருேம்" என்று தட்டிக்கழித்துவந்த ஆங்கில வல்லரசை நினைந்து வருந்தினுர் காந்தி. அந்த வல்லரசை எதிர்த்துப் போராடவும் தொடங்கிவிட்டார். உலகம் முழுவதையும் அடக்கி ஆண்டு கொண்டிருந்த ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்க்க அவரிடமிருந்த ஆயுதம் என்ன? சத்தியம், அகிம்சை இவைகளே! இவைகளைக்கொண்டு ஆரம்பித்த சத்தியப்போரில் வெற்றி கண்டார்.

'சத்தியம், சத்தியம்' என்று காந்தியார் அதனைக் கடைப்பிடித்த வேளையிலும் இன்னெரு புறத்தில் உணர்ச்சிப் புயல் கிளம்பி பயங்கரங்களையும் படுகொலைகளையும் ஏற்படுத்தியதையும் நாம் மறக்க முடியாது!

வெள்ளையன் வெளியேறினுன். நாடு சுயாட்சி பெற்றது. அடிமைத் தளை அறுந்தது!

அன்று, நாற்பத்தெட்டாம் ஆண்டு தைமாதம் முப்பதாம் நாள் பிரார்த்தனைக்காகச் சென்ருர் காந்தி. கூட்டத்திலிருந்து கோட்சே என்பவன் காந்தியாரைக் கும்பிட்டான்! அடுத்த கணம்...

'எதிரியை நேசி' என்ருர் ஏசுநாதர். அவரைப் போன்று வாழ்ந்த காந்தியைச் சுட்டுவிட்டான் கோட்சே!

செத்த பிறகு சிலையெடுக்கும் வழக்கம் எமக்கு மெத்தவும் உண்டு!

உத்தமன் காந்தியார் போல் எம் மத்தியிலும் போராடும் உத்தமர் இன்று உண்டு! அதே கொள்கை, அதே இலட்சியம்!

அடிமைத் தளையறுந்து உரிமையுடன் நாம் வாழும் அந்த நாள் எந்நாளோ? காந்தியின் நினைவு நாள் அதற்குப் பதில் சொல்லட்டும்!

—'நடமாடி'



# குன்றுதொருடும் குமரவேள்
## குறிஞ்சிக் குமரனை வணங்குவோம்

● இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாக குறிஞ்சிக்குமரன் கோவிலில் தற்போது நடைபெற்றுவரும் பத்தாவது வருடாந்த திருவிழாவையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

—ந. நிர்மலன் (விஞ்ஞானபீட (புவி சரிதவியல்-சிறப்பு) இறுதிவருட மாணவன்)

சரவணப் பொய்கையிலே உதித்த சண்முகன், சூரனை அழித்து உலகை உய்யவைப்பதற்கென வந்தவன். நான்முகனும் அறியாத பிரணவத்தின் பொருளைத் தந்தைக்கு உபதேசித்த சிவகுருநாதன் அவன். குன்று தோறும் குடிகொண்ட குமரன். அழகன் முருகன் பெருமையைப் பாடாத நூல் இல்லை, நாவில்லை. எண்ணுத நெஞ்சமில்லை. அவன் நினைவுகள் என்றுமே இனியவை. இயற்கையின் எழிலை ஒருங்கே தனக்குள் அடக்கிய அழகன், அந்த குறிஞ்சிக் குமரன். அடியார்கட்கு எழிதில் இரங்கி அருள் பாலிக்க என்றுமே தயங்குவதில்லை.

இவ்வாறு பலராலும் போற்றி வழிபடப்படுகின்ற குன்று தோருடி வரும் குமரன் எழில் மிகு ஈழத்தின் குறிஞ்சி மலைநாட்டில் உயர் கல்விப் பீடமாக அமைந்துள்ள பேராதனை நகரில் குன்று ஒன்றின் மீது குடி கொண்டான். அவனை இங்கு அழைத்து வந்து இருத்தினர் பல்கலை பயிலவந்த மாணவர் அழைத்து இருத்தியதுடன் நில்லாது ஆண்டு தோறும் அவனுக்கு அலங்கார உற்சவம் எடுத்தும் வருகின்றனர். இவ்விழா தைமாத பௌர்ணமி சேரும் பூசத் திருநாளை (3-2-77) இறுதி நாளாகக் கொண்டு வரும் முதல் பத்து நாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பண்டு தொட்டு பழந்தமிழர் கூட்டம் வழிபட்டு வந்த தமிழ்த் தெய்வம் முருகனுக்கு, சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பல்கலைக்கழகத்திலே, இன்றைய தமிழ் மாணவர்கள் வியத்தகு வகையில் விழா எடுக்கின்றனர். பல்கலைக்கழகம் முழுவதுமே விழாக் கோலம் பூண்டுள்ளது. எங்கு நோக்கினும் பக்தி வெள்ளம். பயில வந்த பாவையர் நோன்புடன் விழாவை அனுஷ்டிக்க; காளையர் கூட்டம் தீவிர திருப்பணிகளில் ஈடுபடுவது என்றுமெ நெஞ்சை விட்டகலாக் காட்சியாகும். சுருங்கக்கூறின், இத்தினங்களில் மாணவர் மத்தியில் பாட நூல்கள் கொண்ட இடத்தை குமரன் விழா பெற்று வருகின்றது. அவன் அருளைப் பெற்ருல் தானே கல்வியை வெற்றிகரமாக அணுக முடிகின்றது என்ற பேருண்மையை அறிந்தவர்கள் போலும் இந்தத் தமிழ் மாணவர்கள்.

பல கலைகளையும் பயில வந்த மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்று மீண்டதும், தாங்கள் கோயில் எடுத்த குமரனை ஒன்று கூடி வழிபடும் நோக்கில் தைப்பூசத் திருவிழாவைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும். இதைவிட, பல்கலைக்கழக மாணவர்களுக்கும்; எதிர்காலங்களிலே பல்கலைக்கழகம் புகவிருக்கும் மாணவர்களுக்கு மிடையே தொடர்பு இருக்க வேண்டுமென்பதற்காகவும், இக்குறிஞ்சிக் குமரனே தம்முடைய வருங்கால பல்கலைக்கழக வாழ்க்கைக்கு வழிகாட்டுவான் என்பதற்காகவும்; விழாவின் ஏழாம் நாளினை அகில இலங்கை இந்துப் பாடசாலை மாணவிகள் பொறுப்பெடுத்து நடாத்துவது ஒரு சிறப்பம்சமாகும்.

இப்படி எத்தனையோ சிறப்பம்சங்கள் நிரம்பிய குறிஞ்சிக் குமரன் அழகுக்கு அழகு செய்து திருவிழாக் காலங்களிலே பச்சை மயில் மீது உலாவரும் அழகிருக்கிறதே; அது நேரிலே அனுபவிக்க வேண்டிய தொன்ருகும். எம்பெருமானைக் காணுத கண்ணென்ன கண்ணே என்று தான் கூறத் தோன்றும். இதனிலும் மேலாக தைப்பூசத்திருநாளன்று எம்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய் உமையம்மை இடப்பக்கத்திலும் தமையன் விநாயகன் வலப்பக்கத்திலும்' சூழ்ந்து வந்து எம்மவர்க்குக் காட்சியளிப்பது காணுதற்கரிய தொன்ருகும்.

இத்தகைய குமரனை நம்பினேர் கைவிடப்படார். அவனை இதயக்கமலத்திலே இருத்தியோருக்கு நாளும் கோளும் துன்பம் செய்யா. தேடி வந்த தீவினைகள் செயலற்றதாகி விடும். கொடிய கூற்றுவன் கூட ஒதுங்கி விடுவான் எனவே இத்தினங்களிலே அவனருள் அனை வருக்கும் கிட்டிட அவன் தாள் பணிந்து வணங்குவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

"முருகனைச் செந்தில்
முதல்வனை
மாயோன் மருகனை
ஈசன் மகனை
ஒருகை முகன் தம்பியை
அவன் தண்டைக்
காலை மனத்திருத்தி
மெய்மை குன்ரு
மொழிக்குத் துணை
முருகா எனும்
நாமங்கள்"

என்று கூறி வணங்குவோம்.

## உலகை ஒரு கண்ணேட்டம்

—6-ம் பக்கத் தொடர்

என்று எதிர்பார்க்கப்படுகிறது.

●

பங்களா தேஷ் பிரிந்து சென்ற பின்னர், பாகிஸ்தான் தனது முதலாவது பொதுத் தேர்தலை மார்ச் மாதம் 7ம் திகதி நடத்தவிருக்கிறது. பாகிஸ்தான் தேசிய பேரவைக்கு 200 உறுப்பினர்களும், பஞ்சாப், சிந்து, வடமேற்கு முனை மாகாணம், பலூசிஸ்தான் ஆகிய மாகாண சபைகளுக்கு 460 உறுப்பினர்களும் இத்தேர்தலில் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பூட்டோவின் ஆளுங்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு எதிராக எட்டு எதிர்க்கட்சிகள் தொகுதி உடன்பாடு செய்துகொண்டு மோதுகின்றன. எதிர்க்கட்சிகளின் இந்தக் கூட்டு பூட்டோவின் நிம்மதியைக் குலைத்து வருகிறது.

வடமேற்கு முனையிலும், பலூசிஸ்தான் மாகாணத்திலும் எதிர்க் கட்சிகளுக்கு பெருத்த ஆதரவு இருந்து வருகிறது. 1970 பொதுத் தேர்தலில் இந்த மாகாணங்களில் பெரு வெற்றியீட்டிய தேசிய அவாமி லீக் இன்று தடைசெய்யப்பட்டிருப்பதுடன், அதன் தலைவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர். பலூசிஸ்தானில் பட்டாணியர்களின் சுயாட்சிக் கோரிக்கையும் இருந்து வருகிறது.

இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு நானேதான் காரணம் என்று பாகிஸ்தான் ஜனுதிபதி பூட்டோ மார்தட்டிய போதிலும் — அவருக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டொன்றை அவரது கட்சியை எதிர்த்துப் போட்டியிடும் 'ஜமாத் இஸ்லாமி' என்ற மத ரீதியிலான கட்சியின் உபதலைவர் ஜனுப் மௌலானு ஜான் மொகமத் அபாஸி வீசியிருக்கிருர்,

பூட்டோவின் தொகுதியான லாத்னுவில் தாம் பூட்டோவை எதிர்த்துப் போட்டியிடவிருந்ததாகவும், தன்னைப் போட்டியிட விடாமல் தடுக்கும் பொருட்டு தாம் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யவிடாமல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படவிருந்த நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வேண்டுமென்றே தாம் கைதுசெய்யப்பட்டு இரண்டு நாட்களாக சிறையிலடைக்கப்பட்டதாகவும், தம்மைச் சிறையில் தள்ளிவிட்டு பூட்டோவை எதிர்க்க எவரும் முன்வரவில்லையென்று வேண்டுமென்றே பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாகவும், திரு. அபாஸி பாரதூரமான குற்றச்சாட்டொன்றை பூட்டோவுக்கு எதிராக வீசியிருக்கிருர்.

பூட்டோவின் தொகுதிக்கு மீண்டும் புதிய நியமனப்பத்திரங்கள் கோரப்பட வேண்டுமென்றும் அபாஸி வலியுறுத்தியுள்ளார். பூட்டோவுடன் போட்டியிடவிருந்த தம்மை, ஆயுதம் தரித்த கோஷ்டியொன்று சனவரி 17ம் திகதி கைது செய்து, 40 மைல்களுக்கப்பால் உள்ள வீடொன்றுக்கு கொண்டு சென்று இரண்டு நாட்களாகப் பூட்டி வைத்திருந்ததாக திரு. அபாஸி குற்றம் சுமத்தியுள்ளார்.


அபாஸியின் இந்தப் பாரதூரமான குற்றச்சாட்டையடுத்து, பாகிஸ்தானில் தேர்தல் பிரசாரம் உக்கிரமடைந்துள்ளது. அபாஸியின் இக் குற்றச்சாட்டு, பூட்டோவையும், அவரது கட்சியினரையும் ஒரு கலக்கு கலக்கியுள்ளது. பூட்டோ மீண்டும் பாகிஸ்தானின் ஆட்சியை கைப்பற்றுவது சுலபமல்ல என்ற முடிவுக்கே இன்றைய நிலையில் ஒருவர் வர முடியும். ஆனுல், போகப்போக தேர்தல் காற்று எவ்வாறு வீசும் என்பதை இப்போதே கூறிவிட முடியாது.

—கோவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாவியுங்கள் பளிச்சிடும் வெண்மைக்கு

ரோயல் நீலம்




போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள். நீலம் வாங்கும் பொழுது எப்பொழுதும் மேல் கொடுத்துள்ள வியாபார சின்னத்தை கவனித்து வாங்கவும்.

தரம் குறைந்த பொருட்களுக்கு மலிவான விலை
திறமான பொருட்களுக்கு தரமான விலை

வியாபாரிகட்கு விசேட கழிவுண்டு;
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

தயாரிப்பாளர்:
சிவா இண்டஸ்றீஸ்
112-1/3, 4-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11.

விநியோகஸ்தர்கள்:
சேகர் அன் பிறதர்ஸ்
கொழும்பு.
தொலைபேசி: 35049

**CENTRE FOR ENGLISH EDUCATION**

23, உருத்திராமாவத்தை; வெள்ளவத்தை

வகுப்பிடங்கள்: வெள்ளவத்தை; யாழ்நகர்.
யாழ் மாணவர் கடிதமூலம் தொடர்புகொள்ளவும்.

"பிரதோஷ விரத மகிமை"

மில்க் வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளில் ஏதாவது இரண்டு அனுப்பி மேற்படி புத்தகம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விநியோகப் பகுதி,
**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,**
த. பெ. எண். 77
**யாழ்ப்பாணம்.**

## ஐ. தே. கட்சி

—1-ம் பக்கத் தொடர்

ரர் மாணிக்கவாசகர் இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

குழுமியிருந்த மக்கள் மத்தியில் அமிர் அவர்கள் பேசும் பொழுது, ஐ. தே. கட்சிக்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதாகவும், விடுதலை வேட்கை கொண்ட இளைஞர்களையும் இனமொழி பற்று கொண்ட தொண்டர்களையும் காணும்பொழுது கல்குடாவில் அரசியல் மாற்றத்தைதான் காணக்கூடியதாக இருப்பதாகவும், வரும் தேர்தலில் கூட்டணி அபேட்சகரின் வெற்றி உறுதியாகிவிட்டது என்றும் கூறினர். திருமதி மாணிக்கவாசகர் நன்றி கூறினர். கல்குடாத் தொகுதியின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற 20க்கு மேற்பட்ட கருத்தரங்குகளிலும் செங்கலடி, வாழைச்சேனை பொதுக்கூட்டங்களிலும் அமிர்தலிங்கம் தம்பதிகள் கலந்துகொண்டார்கள்.

செல்லமகால் 3-வது வாரம்

கமலஹாசன், ஸ்ரீவித்யா,
ஜெயசுதா, சுந்தரராஜன்
நாகேஷ் நடித்த-



கே. பாலச்சந்தரின்
அபூர்வ ராகங்கள்

கெயிட்டி
8-வது வாரம்
ஜெய்சங்கர், லக்ஷ்மி
முத்துராமன், ராஸ்தா,
சுருளிராஜன், ஐ, எஸ். ஆர்.
நடித்த-
கனிமுத்து பாப்பா

கிங்ஸ்லி-லிடோ 2வது வாரம்
யாழ் நகர்
முத்துராமன, ஏ. வி. எம். ராஜன்,
லலிதா, நிர்மலா, சோ, மனோரமா
நடித்த,
வீட்டுக்கு வந்த மருமகள்

கெப்பிட்டல் 8-வது வாரம்
எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா,
[இரு வேடங்களில்]
சந்திரகலா நடித்த-
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்) 9-வது வாரம்
சிவாஜி, மஞ்சுள நடித்த-
மன்னவன் வந்தானடி கலர்

பிளாசா 3-வது வாரம்
கமலஹாசன், ஸ்ரீவித்யா, ஜெயசுதா, சுந்தரராஜன்
நாகேஷ் நடித்த-
கே. பாலச்சந்தரின்
அபூர்வ ராகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1977-ம் வருடம் ஜனவரி மாதம் 30-ந் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்படுகின்றது.